விலை: 50.00
பக்கங்கள் - 16

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 052 வள்ளுவர் ஆண்டு 2057 தை 26 திங்கட்கிழமை (09.02.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## அரசியல் தீர்வு தொடர்பில்
# தமிழர் தரப்பிடையே ஒருமித்த நிலைப்பாடு
## சுவிஸ் தூதரகம் ஏற்பாடு

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு விடயத்தில் தமிழ்த்தரப்புக்கள் அனைத்தையும் ஒருமித்த நிலைப்பாட்டுக்குக் கொண்டுவரும் நோக்கில் சுவிட்ஸர்லாந்து தூதரகத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் 19ஆம் திகதி தமிழ்த்

16ஆம் பக்கம் பார்க்க

# கிவுல் ஓயாத் திட்டம் குறித்து வெலிஓயாவில் இன்று சந்திப்பு
## எம்.பிகள் உட்பட பிரதிநிதிகளுக்கு அழைப்பு

(வவுனியா)

வவுனியா வடக்கினை மையப்படுத்தி முன்னெடுக்கப்படவுள்ள கிவுல் ஓயாத் திட்டம் சம்பந்தமாக இன்று திங்கட்கிழமை (09) வெலிஓயாவில் உள்ள மகாவலி அபிவிருத்தி அதிகார சபையின் அலுவலகத்தில் முக்கிய கலந்துரையாடலொன்றுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

வன்னிமாவட்டத்தினைப் பிரதிநிதித்துவம் செய்யும் ஆளும் எதிர்த்தரப்பு எம்.பிக்கள், உள்ளூராட்சி மன்றங்களினுடைய பிரதிநிதிகள்,

15ஆம் பக்கம் பார்க்க

## மின்கட்டணக் கொள்கை இன்று அமைச்சரவைக்கு

(கொழும்பு)

மின்சார சபை மறுசீரமைப்புத் திட்டத்தின் கீழ், தேசிய மின்சக்தி கொள்கை மற்றும் தேசிய மின் கட்டணக் கொள்கை தொடர்பான அமைச்சரவைப் பத்திரத்தை விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் இன்று (09) அமைச்சரவையில் சமர்ப்

15ஆம் பக்கம் பார்க்க

## விளான் சந்தியில் இரு குழுக்கள் மோதல்
### இருவர் காயம்

(விளான்)

இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விளான் சந்தியில்நேற்று(8)ஞாயிற்றுக்கிழமை மதியம்இருகுழுவினருக்கு

02ஆம் பக்கம் பார்க்க

# தையிட்டி விகாரையை வைத்து வடக்கிலும் தெற்கிலும் இனவாதம்
## ஜனாதிபதி அநுர அதிருப்தி



(கொழும்பு)

தையிட்டி திஸ்ஸ விகாரையின் பெயரால் வடக்கிலும் தெற்கிலும் இனவாதம் தூண்டப்படுவதாக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

(02ஆம் பக்கம் பார்க்க)

## செம்மணி புதைகுழி அகழ்வு திகதி நிர்ணயம் இன்று

(யாழ்ப்பாணம்)

இலங்கை இராணுவத்தால் யாழில் அரங்கேற்றப்பட்ட கொடுரங்களின் சாட்சியாய் உள்ள செம்மணி மனிதப் புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வுக்கான திகதி யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றால் இன்று நிர்ணயிக்கப்படவுள்ளது.

முன்னதாக கடந்த ஜனவரி மாதம் 19ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின்போது தற்சமயம் அகழ்வுத் தளங்களுக்குள் வெள்ள நீர் தேங்கியுள்ளமையால், உடனடியாக அகழ்வுப் பணிகளை ஆரம்பிக்க

15ஆம் பக்கம் பார்க்க

## வெளிக்குடியேற்றங்கள் இடம்பெறாது தமிழர்களும் உள்ளீர்க்கப்படுவர்
### கிவுல் ஓயாத் திட்டம் குறித்து பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க




(கொழும்பு)

முன்னெடுக்கப்படவுள்ள கிவுல் ஓயாத்திட்டத்தால் புதிய குடியேற்றங்கள் வெளிமாவட்டங்களிலிருந்து கொண்டுவரப்போவதில்லை என்பதை உறுதியுடன் தெரிவித்துக் கொள்வதோடு,

15ஆம் பக்கம் பார்க்க

## பேராசிரியர்களாக இருவர் பதவி உயர்வு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் இருவர் பேராசிரியர்களாக பதவி



02ஆம் பக்கம் பார்க்க

Sri Lanka POST

## தபால் கட்டணங்கள் இன்று முதல் அதிகரிப்பு

03ஆம் பக்கம் பார்க்க

### தீவிரமடைகிறது
## அரச மருத்துவர்களின் தொழிற்சங்க நடவடிக்கை

(கொழும்பு)


இலங்கையின் இலவச பொதுச் சுகாதார மற்றும் வைத்தியசாலைக் கட்டமைப்பைப் பாதிக்காதவாறு தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் தொழிற்சங்க நடவடிக்கையை மேலும் தீவிரப்படுத்த தயாராக உள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

அதற்கமைய எதிர்வரும் 11ஆம்

02ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய நூதன சப்ததள பஞ்சகுண்டசகித இராஜ கோபுர கும்பாபிஷேகப் பெருவிழா நேற்று இடம்பெற்றது.

*படங்கள் : சிவசாந்தன்*

## விளான்...

இடையே இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் இருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன், ஒருவர் இளவாலைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

குறித்த பகுதியில் பெரியவிளான் மற்றும் பண்டத்தரிப்புப் பகுதிகளைச் சேர்ந்த இருவருக்கிடையே ஆரம்பித்த மோதலில் இருவர் சார்பாகவும் அணி திரண்டவர்களால் அது குழு மோதலாக விஸ்தீரணமடைந்தது.

இதன்போது இருவர் காயங்களுக்குள்ளான நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் ஒருவரைக் கைது செய்த நிலையில் ஏனையோர் தப்பிச் சென்றுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. விசாரணைகளின் பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ந-7,104)

## தையிட்டி...

டித்வா சூறாவளியால் முழுமையாக வீடுகளை இழந்த குடும்பங்கள் மற்றும் மண்சரிவு அபாயம் அதிகமுள்ள இடங்களாக இனங்காணப்பட்ட பிரதேசங்களைச் சேர்ந்த குடும்பங்களை மீளக் கட்டியெழுப்புவதற்கான (Re building Srilanka) திட்டத்தின் கீழ் காணிகள் மற்றும் வீடுகளை நிர்மாணிப்பதற்கான நிதியுதவிகளை வழங்கும் நிகழ்வொன்றில் கலந்து கொண்ட போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்துரைத்த அவர்,

நாட்டை ஒன்றிணைப்பதற்கு இரு குழுக்கள் தடையாகவுள்ளன. ஒன்று வடக்கில் இருக்கும் தமிழ் இனவாதிகள் மற்றையது தென் பகுதியிலுள்ள சிங்கள இனவாதிகள்.

இவர்கள் வடக்கில் இருக்கும் தையிட்டி விகாரைக்குச் சென்று போயா தினத்தில் விகாரையை அகற்றுமாறு கூச்சலிடுகின்றனர். அதற்கு சமமாக தென்பகுதி இனவாதிகள் அதே விகாரைக்கு போயா தினத்தில் செல்வது குழப்பதை ஏற்படுத்துவதற்கே தவிர வேறு எதற்குமில்லை.

குறித்த குழுக்கள் மீண்டெழுவதற்கு இனவாதம் தேவையாகவுள்ளது. எமது இனம், மதம் எனக் கூறும் போது இரத்தம் துடிக்கும். அது உண்மைதான். அதைத்தான் அந்த சிறு குழு செய்து கொண்டிருக்கிறது.

ஆனால் நாட்டில் இனி இனவாதத்திற்கு இடமில்லை. அதற்கான சட்ட திட்டங்கள் போதாதென்றால் அதனை உருவாக்கி இனவாதத்திற்கு முடிவு கட்டுவோம்.

பௌத்த தர்மம் மற்றும் எமது வரலாறு என்பது எமக்கு அரசியல் மேடைகளில் பயன்படுத்தப்படும் வெறும் கோஷங்கள் அல்ல.

எமது கடந்தகால உரிமைகளை அடிப்படையாகக் கொண்டு நவீன உலகிற்கு ஏற்ற பொருளாதார மாற்றத்திற்காக அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படும் என்றார். (ந-7)

## அரச மருத்து...

திகதி தமது அடுத்தகட்ட தொழிற்சங்க நடவடிக்கை குறித்து தீர்க்கமான முடிவொன்று எடுக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது. தொடர்பில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில், நாடு தழுவிய ரீதியிலான தொழிற்சங்க நடவடிக்கையைத் தொடர தமது மத்திய செயற்குழு ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது.

மேலதிக வசதிகள் அல்லது கொடுப்பனவுகள் அன்றி, உத்தியோகபூர்வ சேவைத் தேவைகளுக்கு அப்பால் மருத்துவர்கள் ஆற்றிவந்த பணிகளிலிருந்து விலகியிருப்பதே தற்போதைய நடவடிக்கையாகும்.

இதன் விளைவாக பொதுமக்களுக்கு ஏற்படும் எந்தவொரு அசௌகரியத்திற்கும் அரசாங்கமும் சுகாதார அமைச்சருமே பொறுப்பேற்க வேண்டும் என்றுள்ளது.

அதேவேளை, இந்தத் தொழிற்சங்க நடவடிக்கை மருத்துவ இடமாற்றங்களுடன் தொடர்புடையது என சில தரப்பினரால் பரப்பப்படும் கருத்துக்களை அந்தச் சங்கம் நிராகரித்துள்ளது.

இடமாற்றங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகளுக்கு இணங்க கண்டிப்பாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதே தமது நிலைப்பாடு எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ந-7)

## பேராசிரியர்...


உயர்வு பெற்றுள்ளனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீட மகப் பேற்றியல் மற்றும் பெண் நோயியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் மருத்துவ நிபுணர் சிவலிங்கராஜா ரகுராமன் அவர்களும் யாழ்.பல்கலைக்கழக கல்வியியல் துறையின் தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி ஆனந்தமயில் நித்திலவர்ணன் அவர்களும் பேராசிரியாகப் பதவி உயர்வு பெற்றுள்ளனர். (ந-7)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்

மலர்வு 22 - 07 - 1965



உதிர்வு 08 - 02 - 2026

### சபாரத்தினம் சிறீதரன் (தரன்)

**(உரிமையாளர் – தரன் நகை மாளிகை, நெல்லியடி, பருத்தித்துறை)**

மாலு சந்தியைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட சபாரத்தினம் சிறீதரன் அவர்கள் நேற்று (08.02.2026) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் சபாரத்தினம் - முத்தம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வனும் தயந்தினி அவர்களின் அன்புக்கணவரும் நிரோஜன், பிரித்திகா, பவிஷன் ஆகியோரின் அன்புத் தந்தையும் பஞ்சாட்சரம் - சாந்தலட்சுமி தம்பதிகளின் பாசமிகு மருமகனும் இ.கமலா, அ.இந்திராதேவி, ச.சுந்தரலிங்கம் (அமரர்), ச.சிவபாலன் (அமரர்), இ.பத்மாவதி, ச.விஜயகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ப.ஜெயதரன், ம.குமுதினி, சி. சுஜீந்தினி, ப.கோபிதரன், எ.நிரஞ்ஜனி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (09.02.2026) திங்கட்கிழமை காலை 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

விஸ்வகுல ஒழுங்கை
(கோழிக்கடை)

(2035)

தகவல் : குடும்பத்தினர்
077 432 0448


பல ஆயிரம் கடந்த பதிவுகள்...

பல நூற்றுக்கு மேற்பட்ட திருமணங்களை பொருத்திய சாதனைகள்



உங்கள் கல்யாண மாலை


(சர்வதேச இலவச திருமண சேவை)

உலகின் எப்பாகத்திலிருந்தும் தொடர்புகொள்ள

www.kalyanamalai.lk

இணையத்தளத்தைப் பாருங்கள்

பதிவுக்கட்டணம் : 4000/= மட்டும்



தொடர்பு – கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P : 021 720 1005
076 097 3120
Email : Kalyanamalai.jaffna@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவசரகால சட்டத்தைப் பயன்படுத்தி மக்களை ஒடுக்கமாட்டோம்

அமைச்சர் நளிந்த



(கொழும்பு) ...................

**அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி மக்களை ஒடுக்குவதற்கான நடவடிக்கைகளை நாங்கள் எடுக்கமாட்டோம் என அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில், நாம் கடந்த கால அரசுகள் செய்தபடி அவசரகாலச் சட்டத்தை மக்களின் உரிமைகளை அடக்குவதற்காகப் பயன்படுத்த மாட்டோம்.

எமது அரசு, பொதுமக்கள் பாதுகாப்பையும், சட்டம் மற்றும் ஒழுங்கை நிலைநாட்டும் விதமாக மட்டுமே சட்டங்களைப் பயன்படுத்தும்.

கடந்த ஆட்சியில் இருந்த அரசாங்கம் அவசரகாலச் சட்டத்தை அரசு மீதான விமர்சனங்களை அடக்கவும், அரசியல் எதிரிகளைக் கட்டுப்படுத்தவும் பயன்படுத்தியிருந்தது. ஆனால் எமது அரசு சட்டத்தின் வழியாக மக்களுக்குச் சேவை செய்யும் நோக்கத்துடன் செயற்படுகின்றது.

எதிர்க்கட்சிகள் சொல்வது போல் நாம் செயற்பட முடியாது. எமது அரசின் நோக்கம் ஒழுங்கும் சமத்துவமும் காக்கும் விதமாகச் சட்டத்தை பயன்படுத்துவதே ஆகும்.

நாட்டு மக்கள் எமது அரசை நம்பியிருக்கின்றார்கள். எனவே, எமது நடவடிக்கைகள் சொல்லில் மட்டும் இல்லாமல் செயலிலும் வெளிப்படையாக இருக்க வேண்டும். நாம் சட்டத்தின் உண்மையான நோக்கத்தைக் கடைப்பிடிப்போம். நாம் மக்களின் உரிமைகளை மதிப்போம்.

அவசரகாலச் சட்டம் பொது மக்கள் பாதுகாப்புக்கும் சமூக அமைதிக்கும் மட்டுமே பயன்படுத்தப்படும்" என்றார். (8)

# யானை உயிரிழப்பு

(கொழும்பு)

திருகோணமலை - மொரவெவ, பகுதியில் வாய்வெடி உட்கொண்ட யானையொன்று உயிரிழந்தமை தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது.

யானையின் வாய், வீக்கமாக காணப்பட்டதாகவும் வாய்வெடி உட்கொண்டமையாலேயே குறித்த யானை உயிரிழந்துள்ளதாக பிரேத பரிசோதனையில் தெரிய வந்துள்ளது.

மேலும், மொரவெவ பிரதேசத்தில் வனவிலங்குகள் அதிகளவில் கொல்லப்பட்டு வருவதாகவும் தேவையற்ற வெடி பொருட்களை பாவித்து மிருகங்களை கொல்ல வேண்டாம் எனவும் வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (8)

# ஊராட்சி முற்றக்கூட்டம்

(சாவகச்சேரி)

யாழ்ப்பாண மாவட்ட செயலகம் மற்றும் வடமாகாண மகளிர் விவகார அமைச்சின் ஏற்பாட்டிலான ஊராட்சி முற்றக்கூட்டம், கிறிசலிஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் கடந்த 5 ஆம் திகதி வியாழக்கிழமை அரசாங்க அதிபர் பிரதீபன் மற்றும் வட மாகாண மகளிர் விவகார அமைச்சின் உதவிச் செயலாளர் திருமதி எஸ்.லதுமீரா ஆகியோரது இணைத் தலைமையில் மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இக் கூட்டம் யாழ்.மாநகர முதல்வர் திருமதி மதிவதனி விவேகானந்தராஜா, மேலதிக அரசாங்க அதிபர் திரு கே.சிவகரன், உதவி மாவட்டச் செயலாளர் செல்வி உ.தர்சினி மற்றும் குடிசார் அமைப்புகளின் சம்மேளனத் தலைவர் திருமதி ம.தமிழ்செல்வி ஆகியோரின் பங்குபற்றுதலுடன் நடைபெற்றது. மேலும், மக்கள் எதிர்நோக்கும் பல்துறைசார் பிரச்சினைகள் மற்றும் அவர்களின் தேவைப்பாடுகள் தொடர்பாக ஊராட்சி முற்றத்தில் கலந்துரையாடி தீர்வு வழங்குவதை நோக்காகக் கொண்டு இக்கூட்டம் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (8-30)

# சட்டவிரோத மணல் அகழ்வு இரண்டு சந்தேக நபர்கள் கைது

(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தின் தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லாறு பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சட்டவிரோதமான முறையில் தடை செய்யப்பட்ட பகுதியில் மணல் அகழ்வில் ஈடுபடுவதாக தருமபுரம் பொலிஸாருக்கு நேற்று முன்தினம் இரவு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைவாக இரண்டு டிப்பர்கள் மற்றும் இரண்டு உழவு இயந்திரங்கள் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.



குறித்த கல்லாறு பகுதியில் வன விலங்குகள் மற்றும் பறவைகள் சரணாலயம் என்பன காணப்படுவதனால் அப்பகுதியில் மணல் அகழ்வு முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த பகுதியில் சிலர் சட்ட விரோதமான முறையில் இரவு வேளைகளில் மணல் அகழ்வில் ஈடு பட்டு வெளிமாவட்டங்களுக்கு கொண்டு செல்லப்படுவதாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுக்கு அமைவாக இரண்டு டிப்பர்கள் மற்றும் இரண்டு உழவு இயந்திரங்கள் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டன. குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய இரண்டு சந்தேக நபர்களையும் தருமபுர பொலிஸார் விசாரணைகளின் பின்னர் பொலிஸ் பிணையில் விடுவித்துள்ளனர்.

அத்துடன் தடய பொருட்களை எதிர்வரும் 11 ஆம் திகதி கிளிநொச்சி நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தருமபுர பொலிஸார் தெரிவித்துள்ளனர். (8-316)

# வாகன இலக்கத் தகடுகள் அச்சிடும் பணி மீண்டும் ஆரம்பம்

(கொழும்பு)

அடுத்த மூன்று மாதங்களுக்குள் வாகன இலக்கத் தகடுகள் அச்சிடும் பணி மீண்டும் தொடங்கும் என்று மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் அறிவித்துள்ளது.

தற்போது அச்சிடுவதற்கு கிட்டத்தட்ட 4 இலட்சம் இலக்கத் தகடுகள் நிலுவையில் உள்ளதாக அந்தத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் கமல் அமரசிங்க தெரிவித்தார்.

அந்தவகையில் புதிய இலக்கத் தகடு தயாரிப்பு சர்வதேச தரத்திற்கு இணங்க இருக்கும் என்று அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

முந்தைய டெண்டர் இரத்து செய்யப்பட்டதைத் தொடர்ந்து கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் அச்சிடும் பணிகள் நிறுத்தப்பட்டதாக குறிப்பிட்டார். இதன் காரணமாக வாகன உரிமையாளர்கள் தற்காலிக இலக்கத் தகடுகளைக் காட்சிப்படுத்த திணைக்களம் அனுமதி வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (8)

# உலகவங்கிப் பிரதிநிதிகள் இலங்கை வருகை

(கொழும்பு)

உலகவங்கிப் பிரதிநிதிகள் அடுத்த மாதம் இலங்கை வரவுள்ளனர்.

2022-23 பொருளாதார நெருக்கடியால் இடைநிறுத்தப்பட்ட நெடுஞ்சாலைகள், கல்வி மற்றும் உட்கட்டமைப்பு தொடர்பான திட்டங்களை மீண்டும் தொடங்கும் வகையில் இந்த விஜயம் அமைகிறது.

குறித்த திட்டங்களை அடுத்த 5 ஆண்டுகளுக்குள் முழுமையாக நிறைவு செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

உலக வங்கியின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மற்றும் இலங்கைக்கான பணிப்பாளர் ஆகியோர் ஏற்கனவே திறைசேரி செயலாளருடன் இது குறித்து ஆலோசித்துள்ளனர்.

இதேவேளை, சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிரிஸ்டலினா ஜோர்ஜியேவா பெப்ரவரி 17 அன்று இலங்கை வருகிறார்.

அவர் பெப்ரவரி 18 ஆம் திகதி அன்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவைச் சந்திப்பார் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விஜயத்தின் போது விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் 5 மற்றும் 6 ஆவது மதிப்பாய்வுகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (8)

# நற்கருணை விழா

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை தும்பளை புனிதலூர்து அன்னை திருத்தல திருவிழாவில் நாளை செவ்வாய்க்கிழமை மாலை திவ்விய நற்கருணை விழாத் திருப்பலியும் ஆராதனையும், பவனியும் யாழ். மறைமாவட்ட குரு முதல்வர் பி. ஜெ. ஜெபரட்னம் அடிகளார் தலைமையில் இடம்பெறவுள்ளது.

11 ஆம் திகதி புதன்கிழமை காலை 5.30 மணிக்கும், 7 மணிக்கும் திருவிழாத் திருப்பலிகள் ஒப்புக் கொடுக்கப்படும். திருவிழாத் திருப்பலியை யாழ் மறைமாவட்ட ஆயர் பேரருட் திரு ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமை தாங்கி ஒப்புக் கொடுப்பார். திருப்பலியின் நிறைவில் புனித லூர்து அன்னையின் திருச்சொருபப் பவனியும் ஆசீரும் இடம்பெறும். (8)

# தபால்கட்டணங்கள் இன்று முதல் உயர்வு

(கொழும்பு)

இன்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் தபால் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளதாகத் தபால் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதன்படி, ஆகக்குறைந்த தபால் கட்டணம் 70 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது

தற்போதைய பொருளாதார சூழலுக்கு ஏற்ப இந்த விலை மாற்றம் அமுல்படுத்தப்படுவதாகத் தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது. (8)

# யோகா பயிற்சிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

மனவளக்கலைமன்ற அறக்கட்டளையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவிலில் இந்த வாரத் திற்கான மனவளக்கலைப் பயிற்சிகள் அறிமுகவுரையுடன் இன்று மாலை 5 மணிக்கு இல.81 பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அறிவுத் திருக்கோவிலில் ஆரம்பமாகும்.

சக்கரை நோய் கட்டுப்பட, ஆஸ்துமா, சளி தொல்லை நீங்க, இரத்த அழுத்தம் கட்டுப்பட, தூக்கம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் தீர, தைராய்டு பிரச்சினை தீர எளிய முறை உடற்பயிற்சிகள், எளியமுறை குண்டலினி தியானப் பயிற்சிகள் உயிர் வளத்திற்கான காயகல்பப் பயிற்சிகள் மற்றும் சூரிய நமஸ்காரம் வழங்கப்படும். பயிற்சிகளில் 14 வயதிற்கு மேற்பட்ட ஆண் மற்றும் பெண் இருபாலாரும் பங்குபெறலாம். பயிற்சிகளை தமிழ்நாட்டில் இருந்து வருகை தந்துள்ள மனவளக்கலை பேராசிரியர் என்.ஜெயகிருஷ்ணன் வழங்குவார்.

தொடர்புகளுக்கு 021 222 2772, 076 857 1395. (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## சூர்யகுமார் யாதவ் அதிரடி

# அமெரிக்காவை எளிதில் வீழ்த்தி இந்தியா அபார வெற்றி!




**ஐ.சி.சி ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் 3ஆவது போட்டியில் இந்திய அணி 29 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.**

மும்பையில் நடைபெற்ற குறித்த போட்டியில் இந்திய மற்றும் அமெரிக்க அணிகள் மோதின.

இதன்படி போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற அமெரிக்க அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட தீர்மானித்தது.

இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகளை இழந்து 161 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் இந்திய அணியின் சார்பில் சூர்யகுமார் யாதவ் அதிகபட்சமாக 84 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.

இந்தநிலையில் 162 ஓட்டங்கள் எனும் வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய அமெரிக்க அணி 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகளை இழந்து 132 ஓட்டங்களை மாத்திரம் பெற்று தோல்வியைத் தழுவியது.

துடுப்பாட்டத்தில் அமெரிக்க அணியின் சார்பில் சஞ்சய் கிருஷ்ண மூர்த்தி மற்றும் சுபம் ரஞ்சனே ஆகியோர் அதிகபட்சமாக 37 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் இந்திய அணியின் சார்பில் அர்ஷ்தீப் சிங், மொஹமட் சிராஜ் மற்றும் அக்ஷார் பட்டெல் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை கைப்பற்றினர். (3)

## இந்திய - பாகிஸ்தான் போட்டி

### ஐ.சி.சியுடன் மீண்டும் அவசர சந்திப்பு!




2026 ரி-20 உலகக் கிண்ணத் தொடரில் பெப்ரவரி 15 ஆம் திகதி நடைபெறவுள்ள இந்தியா - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான லீக் போட்டி தொடர்பாக, சர்வதேச கிரிக்கெட் பேரவை மற்றும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை இடையே முக்கியமான பேச்சுவார்த்தைகள் தொடங்கியுள்ளன.

இந்தியாவுக்கு எதிரான போட்டியைப் புறக்கணிப்பதாகப் பாகிஸ்தான் அரசாங்கம் அறிவித்திருந்த நிலையில், தற்போது பாகிஸ்தான் கிரிக்கெட் சபையுடன் இந்த பேச்சுவார்த்தையைத் தொடங்கியுள் ளதாக இந்திய ஊடகங்கள் தெரி விக்கின்றன.

இந்தியா - பாகிஸ்தான் போட்டி நடைபெறவிட்டால் ஏற்படும் பெரும் நிதி இழப்பை ஈடுகட்ட, பாகிஸ்தான் கிரிக்கெட் சபையிடமிருந்து இழப்பீடு கோரப்படும் என சர்வதேச கிரிக் கெட் பேரவை எச்சரித்துள்ளது.

அரசின் உத்தரவு என்பதால் இந்தப் போட்டியில் பங்கேற்க முடியாது என (தவிர்க்க முடியாத சூழல்) விதியைப் பாகிஸ்தான் பயன்படுத்தியுள்ளது.

ஆனால், ஒரு குறிப்பிட்ட போட்டிக்கு மட்டும் இந்த விதி பொருந்தாது என்றும், மற்ற போட்டிகளில் விளையாடும் பாகிஸ்தான் ஏன் இந்தப் போட்டியில் மட்டும் விளையாட முடியாது என்பதற்கான தகுந்த ஆதாரங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் சர்வதேச கிரிக்கெட் பேரவை கேட்டுள்ளது.

இதனிடையே இந்தப் போட்டியை நடத்தும் ஸ்ரீலங்கா கிரிக்கெட், பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்கு உருக்கமான கடிதம் ஒன்றை எழுதியுள்ளது. இலங்கை மற்றும் சர்வதேச கிரிக்கெட் பேரவை கோரிக்கைகளை அடுத்து, பாகிஸ்தான் கிரிக் கெட் சபை தலைவர் மொஹ்சின் நக்வி தனது நாட்டு அரசாங்கத் துடன் மீண்டும் கலந்தாலோசிக்க உள்ளார்,

இதன் மூலம் இந்தியா - பாகிஸ்தான் போட்டி திட்டமிட்டபடி நடைபெற ஒரு சிறிய வாய்ப்பு உருவாகியுள்ளதாக கூறப்படுகிறது. (3)

## ரி-20 உலகக் கிண்ணத் தொடர்

### ஆப்கானை வீழ்த்தி நியூசிலாந்து அதிரடி!

ஐ.சி.சி ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் 4ஆவது போட்டி நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. சென்னையில் நடைபெற்ற குறித்த போட்டியில் ஆப்கானிஸ்தான் மற்றும் நியூசிலாந்து ஆகிய அணிகள் மோதின.

போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற ஆப்கானிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

அதன்படி, முதலில் துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 182 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

ஆப்கானிஸ்தான் அணி சார்பாக அதிகப்படியாக குல்படின் நைப் 35 பந்துகளுக்கு 63 ஓட்டங்களையும், செடிகுல்லா அடல் 24 பந்துகளுக்கு 29 ஓட்டங்களையும் பெற்றுகொடுத்தனர். அதன்படி 183 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 17.5 ஓவர்களுக்கு 5 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி யிலக்கை அடைந்தது.

நியூசிலாந்து அணி சார்பில் அதிகப்படியாக டிம் சீஃபர்ட் 42 பந்துகளுக்கு 65 ஓட்டங்களையும், கிளென் பிலிப்ஸ் 25 பந்துகளுக்கு 45 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். அதன்படி, 5. விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் நியூசிலாந்து அணி வெற்றி பெற்றுள்ளது. (3)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முச்சக்கர வண்டிகளுக்கு செயலி வருகிறது புதிய திட்டம்

## தேசிய போக்குவரத்து ஆணையகம்

**(கொழும்பு) ..............................**
**முச்சக்கர வண்டிகளின், நாடு முழுவதுமான சேவைகளைத் தரப்படுத்துதல், வெளிப்படையான கட்டணங்களை உறுதி செய்தல், பயணிகளின் பாதுகாப்பை மேம்படுத்துதல், போக்குவரத்து துறையில் கண்காணிப்பு மற்றும் பொறுப் புணர்வை வலுப்படுத்துதல் ஆகியவற்றை நோக்காகக் கொண்டு ,நாடு முழுவதும் சேவையில் ஈடுபடும் அனைத்து முச்சக்கர வண்டிகளையும் செயலி அடிப்படையிலான அமைப்பின் கீழ் இயங்குவதை கட்டாயமாக்க தேசிய போக்குவரத்து ஆணையம் திட்டமிட்டுள்ளது.**

இது தொடர்பில் தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவின் பணிப்பாளர் நாயகம் நிலான் மிரண்டா தெரிவிக்கையில், இலங்கையின் தேசிய போக்குவரத்து ஆணையத்தின் எதிர்கால திட்டமானது அனைத்து முச்சக்கரவண்டி செயற்பாடுகளும் டிஜிற்றல் பயன்பாடுகள் மூலம் நிர்வகிக்கப்பட வேண்டிய ஒரு மாற்றத்தை உள்ளடக்கியது.

போட்டி அதிகரித்துள்ளதால், பல தனியார் நிறுவனங்கள் ஏற்கனவே இத்தகைய தளங்களை வழங்கி வருகின்றன. மூன்று சக்கர வாகனங்கள் இப்போது டாக்ஸி வகையின் கீழ் வருவதால், அவை செயலி அடிப்படையிலான முறைமை யின் கீழ் செயற்பட வேண்டும் மற்றும் தேசிய போக்குவரத்து ஆணையம் அமைத்துள்ள விதிகள் மற்றும் தரங்களை கண்டிப்பாக பின்பற்ற வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பல்வேறு செயலிகளினால் தாம் வாழ்வாதார இழப்பைச் சந்திப்பதாக முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கங்கள் தொடர்ச்சியாக தெரிவித்துவருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (க-8)

## வேகக்கட்டுப்பாட்டை இழந்து மோட்டார் சைக்கிள் விபத்து

(கரணவாய்)

யாழ்ப்பாணம்-நெல்லியடிப் பகுதியில் நேற்றுக் காலை மோட்டார் சைக்கிள் விபத்து இடம்பெற்றுள்ளது.

பருத்தித்துறையிலிருந்து வந்த மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து எதிர்த்திசையில் வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதியுள்ளது.

இதில் மோட்டார் சைக்கிள் செலுத்துநர் கீழே விழ, மோட்டார் சைக்கிள் தன்னிச்சையாக அருகிலிருந்து தொலைபேசிக் கடைக்குள் புகுந்துள்ளது.

குறித்த விபத்தில் கடையில் வைக்கப்பட்டிருந்த கதிரை, கண்ணாடி என்பன சேதமடைந்துள்ளன.

விபத்திற்குள்ளாவர்கள் மந்திகை ஆதார மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (8-60)

## தங்க முலாம் பூசப்பட்ட கலசங்கள் திருட்டு

(கொழும்பு)

புத்தர் சிலைகளிலிருந்து, தங்க முலாம் பூசப்பட்ட கலசங்கள் திருடிய இரண்டு சந்தேகநபர்கள் ஞாயிற்றுக் கிழமை நாவலப்பிட்டி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாவலப்பிட்டிய - கெட்டபுலவ விகாரையிலுள்ள புத்தர் சிலையின் நெற்றியில் இருந்து கலசங்களை முச்சக்கர வண்டியில் வந்த இரண்டு பேர் திருடிச் சென்றதாகக் கிடைக்கப்பட்ட முறைப்பாட்டினை தொடர்ந்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து, நாவலப்பிட்டி பொலிஸார், விகாரையில் பொருத்தப்பட்ட பாதுகாப்பு கமரா காட்சிகளைப் பயன்படுத்தி சந்தேகநபர்களை கைது செய்தனர்.

இவர்கள் புத்தர் சிலைகளின் தலைப் பகுதிக்குச் சேதம் விளைவித்துத் திருடியதாகச் சந்தேகிக்கப்படும் பெருமளவிலான தங்கத்தையும், உருக்கப்பட்ட தங்கக் கட்டிகளையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் நாவலப்பிட்டி நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதுடன், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (8)

## தாக்கினால் பதிலடி கொடுப்போம் அமைச்சர் லால்காந்த எச்சரிக்கை

(கொழும்பு)

அரசியலில் சித்தாந்த ரீதியாகத் தம்மைத் தாக்க முற்படுபவர்களுக்கு அதே பாணியில் பதிலடி கொடுக்கப்படும் என கால் நடை அமைச்சர் கே.டி. லால்காந்த தெரிவித்துள்ளார்.

கண்டியில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இந்த ஆவேசமான கருத்தை வெளியிட்டார்.



இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாங்கள் அரசியல் செய்கிறோம். அரசியல் என்பது ஒரு போர், ஒரு தொடர்ச்சியான போராட்டம். சர்வதேச அரசியலை எடுத்துக் கொண்டால், ஈரான் மீது தாக்குதல் நடத்துவோம் என்கிறது அமெரிக்கா, அதற்குப் பதிலடி கொடுப்போம் என்கிறது ஈரான் . இதுதான் அரசியலின் வழிமுறை.

அப்பாவி மக்கள் அல்லது தமது தரப்பு சித்தாந்த ரீதியாகத் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டால், அதனைப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க முடியாது.

நாங்கள் தாக்கப்பட்டால், பதிலுக்குத் தாக்க வேண்டும். அது எமது உரிமை. தாக்குதலும் பதிலடியும் இல்லாமல் அரசியல் இருக்க முடியாது. இது அரசியலின் தவிர்க்க முடியாத ஒரு பகுதி. இது அரசியலின் இயல்பு, எனவே இதனை ஒரு கேள்வியாக மாற்ற வேண்டாம் என தெரிவித்தார். (8)

## ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்

**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை : பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம்**
**விண்ணப்பதாரரின் பெயர் : அப்புத்துரை உகந்தகுமார்**
**ஆதனப்பதிவேட்டின் படி பெயர் : சொந்தக்காரர்**

**ஆதன இல - 307 வீதி - மாதகல் வீதி வட்டாரம்- 01**

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையின் பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 01 மாதகல் வீதியில் இவ் ஆதனம் அமைந்துள்ளது. கணபதிப்பிள்ளை அப்புத்துரையும் பெண் செல்வமும் (செல்லையா மகள் செல்வம்) ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிஸ் வே.த.கதிர்காமநாதன் முகதாவில் 6108/28.07.2004 திகதிய வெளிப்படுத்தல் உறுதி மூலம் குறித்த ஆதனம் தமக்கே சொந்தமென வெளிப்படுத்தியுள்ளனர். பின்னர் கணபதிப்பிள்ளை அப்புத்துரையும் பெண் செல்வமும் என்பவர்கள் தமது மகனாகிய உகந்தகுமார் என்பவருக்கு இவ் ஆதனத்தை பிரசித்த நொத்தாரிஸ் வே.த. கதிர்காமநாதன் முகதாவில் 6667/17.01.2005 திகதிய நன்கொடை உறுதி மூலம் வழங்கியுள்ளனர்.

மேலும் குறித்த ஆதனத்தை உத்தரவு பெற்ற நில அளவையாளர் S.தனபாலசிங்கம் அவர்களால் அளந்து வரைந்த 0824 ஆம் இலக்க 2025.08.09 ஆம் திகதிய நில அளவைப்படத்தில் நிலப்பரப்பு மூன்று (3) குளி பூச்சியம் தசம் மூன்று நான்கு (00.34) ஆக காணப்படுகின்றது.

**ஆதன விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிதென்மேற்குப் பிரதேச சபை பண்டத்தரிப்பு கோவிற்பற்று மாதகலிறை "யாதும்பை" பர.நில இலா 4 ஆகும். ஆனால் தற்போது அளந்து கொண்ட அளவின் படியும் நிலப்பரப்பு மூன்று (3) குளி பூச்சியம் தசம் மூன்று நான்கு (0.34) ஆகும்.

இதன் எல்லைகள்
கிழக்கு :- பிரதான வீதி மாதகல்
வடக்கு :- வினாசித்தம்பி பாலசிங்கம்
மேற்கு :- சிற்றம்பலம் பெண்இராசம்மா
தெற்கு :- செல்லையா சண்முகதாஸ்

இவ்வாதனத்தை அப்புத்துரை உகந்தகுமார் என்பவர் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் பண்டத்தரிப்பு கிராம உபஅலுவலகத்தின் ஆதனப்பதிவேடுகளில் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார். மேற்படி ஆதன உரிமை மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ ஆட்சேபனையை தெரிவிக்குமாறும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் அப்புத்துரை உகந்தகுமார் என்பவரின் பெயருக்கு ஆதன உரிமை மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த ஆதன உரிமை மாற்றம் செய்வதால் ஏற்படக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**தவிசாளர்,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,**
**மானிப்பாய்.**

(6767)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏலவிற்பனை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் நாளை காலை 8.30 மணிக்கு Gas cylinder, தகரம், இரும்புப் பைப், கோடரி, வாச்சி, கத்தி என்பனவற்றின் ஏல விற்பனை நடைபெறவுள்ளது.

ஏல விற்பனைக்கான பொருட்களை ஏல விற்பனை ஆரம்பமாவதற்கு அரை மணித்தியாலம் முன்பாக பதிவாளரின் அனுமதியுடன் பார்வையிடலாம் என பதிவாளர் அறிவித்துள்ளார். (8)

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அளவெட்டி அருணோதயா கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 11 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 1:30 மணியளவில் கல்லூரி மைதானத்தில் கல்லூரி அதிபர் த.தயானந்தன் தலைமையில் இடம்பெற உள்ளது.

இந் நிகழ்விற்கு பிரதம அதிதியாக வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் பா.முகுந்தன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (8)

### 10 ஆயிரம் ரூபாவுக்கு மேல்

# பொருட்கள் வாங்கினால் காப்புறுதி இலவசம்

### அமைச்சர் வசந்த சமரசிங்க



(கொழும்பு)

**கூட்டுறவு விற்பனை நிலையங்களில் ஒரு மாதத்திற்குள் 10ஆயிரம் ரூபாவிற்கும் அதிகமான பொருட்களைக் கொள்வனவு செய்யும் நுகர்வோருக்கு ஆயுள் காப்புறுதி ஒன்றை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.**

அது தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அமைச்சர்,

இந்தக் காப்புறுதி நுகர்வோருக்கு இலவசமாக வழங்கப்படும் எனவும், அது மூன்று இலட்சம் ரூபாவிற்கும் அதிக பெறுமதியுடையது எனவும் மேலும் குறிப்பிட்டார்.

இதற்கிடையில், கூட்டுறவு ஊழியர்களுக்குத் திருப்திகரமான சம்பளம் மற்றும் ஆயுள் காப்புறுதி உள்ளிட்ட வசதிகளை வழங்கி, இந்தக் கூட்டுறவு இயக்கத்தைப் பொருளாதாரத்தின் ஒரு பகுதியாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்துடன் கூட்டுறவு இயக்கத்தை "திசைகாட்டி"யின் பாரிய மறுசீரமைப்புத் திட்டத்தின் ஊடாக முன்னெடுத்து வருகிறோம்.

அதன் ஊடாக ஒவ்வொரு பிரதேசத்திலும் ஒரு "கோப் சிற்றி"யை ஆரம்பிப்பதற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்போம்.


அத்துடன் நகரப் பகுதிகளில் பாரிய கோப் சிற்றிகளைப் பராமரித்துச் செல்வதற்குத் தேவையான கடன் தொகையை, குறைந்த வட்டியின் கீழ் வழங்க நடவடிக்கை எடுப்போம் என்று தெரிவித்தார். (8)

## போதைப்பொருட்களுடன் 788 பேர் கைது

(கொழும்பு)

நாட்டில் போதைப்பொருளை தடுக்கும் நோக்கிலான "முழு நாடுமே ஒன்றாக" எனும் தேசிய திட்டத்தின் கீழ், நேற்று முன்தினம் சனிக்கிழமை முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளில் சுமார் 788 பேர் போதைப்பொருட்களுடன் கைதுசெய் யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (8)

## விசேட சுற்றிவளைப்பு 526 பேர் கைது



(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போது, 526 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (8)

## வவுனியா காணி மத்தியஸ்த சபைக்கு 23 உறுப்பினர்கள் நியமனம்

(வவுனியா)



வவுனியா மாவட்ட விசேட காணி மத்தியஸ்த சபை உறுப்பினர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வவுனியா மாவட்ட செயலக மண்டபத்தில் இடம்பெற்றது.

வவுனியா மாவட்டத்தில் காணி பிணக்குகளை கையாளும் வகையில் விசேட காணி மத்தியஸ்த சபைகள் கடந்த 2019 ஆம் ஆண்டு முதல் ஆரம்பிக்கப்பட்டு இன்று வரை செயற்பட்டு வருகின்றது.

2019 முதல் காணி மத்தியஸ்தர்களாக செயற்பட்டவர்களின் பதவிக் காலம் நிறைவடைந்த நிலையில் புதிதாக ஆட்சேர்ப்பு செய்வதற்கான பயிற்சிகள் மற்றும் பரீட்சைகள் என்பன கடந்த வருட இறுதியில் நடைபெற்றன. அதனடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட விசேட காணி மத்தியஸ்த சபை தவிசாளர், உப தவிசாளர் மற்றும் மத்தியஸ்தர்கள் என 23 பேருக்கு நியமனக் கடிதங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

நிகழ்வில், வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பீ.ஏ.சரத்சந்திர, மேலதிக அரசாங்க அதிபர் நா.கமலதாசன், வவுனியா மற்றும் மன்னார் மாவட்ட மத்தியஸ்த சபை பயிற்றுவிப்பாளர் செ.விமலராஜா, மத்தியஸ்த சபை அபிவிருத்தி உத்தியோகத்தர் காண்டீபன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு நியமனக் கடிதங்களை வழங்கி வைத்தனர். (8-250)

## கண்டல் தாவரங்கள் நடுகை

(மன்னார்)

சுற்றுச் சூழல் பாதுகாப்பை அடிப்படையாக கொண்டு கடற்கரையோரங்களை பாதுகாப்போம் எனும் தொனிப்பொருளில் மன்னார் றோட்டரிக் இளைஞர்கழக இளைஞர்கள் இணைந்து மன்னார் பிரதான பாலப் பகுதியில் காணப்படும் கரையோரப் பகுதிகளில் கடந்த 7 ஆம் திகதி சனிக்கிழமை கண்டல் தாவரங்களை நடுகை செய்துள்ளனர்.

மன்னார் றோட்டரிக் இளைஞர் கழகத்தின் ஏற்பாட்டில் உள்ளூர் இளைஞர்களுடன் இணைந்து ஏற்பாடு செய்த இந் நிகழ்வில் றோட்டரிக் கழகத்தின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிறப்பு அதிதியாக கலந்து கொண்டு மரம் நடுகையை ஆரம்பித்து வைத்தனர்.

அதனை தொடர்ந்து சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட கண்டல் தாவரங்கள் குறித்த பகுதியில் நாட்டி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (8-285)

## சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 500 | 400 | 400 | 450 |
| உருளைக்கிழங்கு | 160 | 160 | 150 | 150 |
| பச்சைமிளகாய் | 400 | 450 | 500 | 300 |
| தக்காளி | 200 | 200 | 200 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 180 | 250 | 150 |
| கோவா | 250 | 200 | 300 | 300 |
| கரட் | 300 | 420 | 500 | 450 |
| பூசணி | 100 | 120 | 100 | 150 |
| புடோல் | 150 | 200 | 200 | 300 |
| வாழைக்காய் | 150 | 200 | 200 | 250 |
| சின்ன வெங்காயம் | 280 | 300 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 200 | 200 | 200 | 200 |
| பாகற்காய் | 400 | 450 | 600 | 600 |
| வெண்டக்காய் | 350 | 400 | 400 | 400 |
| கருணைக் கிழங்கு | 300 | 260 | 300 | 300 |
| பயற்றங்காய் | 800 | 700 | 400 | 600 |
| லீக்ஸ் | 400 | 400 | 350 | 400 |
| பீற்றூட் | 250 | 300 | 400 | 300 |
| கறிமிளகாய் | 800 | 600 | 600 | 900 |
| முருங்கைக்காய் | -- | -- | 2000 | -- |
| போஞ்சி | 200 | 220 | 400 | 300 |
| கத்தரிதம்புள்ள | 450 | 300 | 300 | 300 |
| கீரை - 1 பிடி | 80 | 40-120 | 200 | 150 |
| தேசிக்காய் | 200 | 150 | 150 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 160 | 150 | 100-150 |
| இராசவள்ளி | 600 | 500 | 400 | 400 |
| வெங்காயப்பூ | 150 | 150 | 200 | 250 |
| முள்ளங்கி | 100 | 100 | 200 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 60 | 150 | 80 |
| வல்லாரை | 60 | 50 | 100 | 100 |
| ஈரப்பலா | 150 | 150 | 150 | 150 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குரலோசை நுண்கலைகளின் தாயகம் நடத்திய முத்தமிழ் பெருவிழாவின் இறுதி நாள் நிகழ்வு யாழ். கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் கடந்த 4 ஆம் திகதி வியாழக்கிழமை இடம் பெற்றது.

(படம்:சுபேசன்)

# கொடிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

## இரு சக்கர உழவு இயந்திரம் (லான்மாஸ்டர்) பெட்டியுடன் பகிரங்க ஏல விற்பனை

எமது சங்கத்திற்கு சொந்தமான 77-2855ஆம் இலக்க (குபாட்டா75) இரு சக்கர உழவு இயந்திரம் லான்மாஸ்டர்(பெட்டியுடன்) 23.02.2026 ஆம் திகதி திங்கட் கிழமை முற்பகல் 11.30மணிக்கு கண்டி வீதியில் உள்ள கொடிகாமம் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க தலைமை காரியாலயத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது. இவ் உழவு இயந்திரத்தினை (லான்மாஸ்டர்) பார்வையிட விரும்புவோர் அலுவலக நாட்களில் காலை 9.00மணி தொடக்கம் பிற்பகல்4.30மணி வரை பார்வையிட முடியும். இவ் ஏல விற்பனையில் கலந்து கொள்ள விரும்புவோர் ஏல விற்பனைத் திகதி அன்று காலை 10.00மணிக்கு முன்னர் மீளளிக்க முடியாத முற்பணமாக ரூபா 1000 (ஆயிரம் ரூபாவும்) மீளளிக்கக் கூடிய முற்பணமாக 5000 (ஐயாயிரம்) ரூபாவினையும் தலைமைக் காரியாலயத்தில் செலுத்திப் பற்றுச்சிட்டையினைப்பெற்று இவ் ஏல விற்பனையில் கலந்து கொள்ள முடியும். ஏலத்தில் உழவு இயந்திரத்தை (லான்மாஸ்டர்) பெற்றுக்கொள்வோர் ஏலத் தொகையினை முழுமையாக அன்றைய தினமே சங்கத்தில் செலுத்தி லான்மாஸ்டரை சங்கத்தில் இருந்து கொண்டு செல்ல வேண்டும் என்பதை அறியத்தருகின்றேன்.

**தலைவர்,**
**பனை தென்னை வள அபிவிருத்தி**
**கூட்டுறவு சங்கம்,**
**கொடிகாமம்.**
**தொலைபேசி இலக்கம்-021 205 0215.**

நல்வாழ்வு தந்து எம்மை வாழ வைத்து எமது குல தெய்வமான
காத்தவராயரின் பாதங்களுக்கு பணிவிடை செய்யச் சென்ற
எமது குடும்பத் தலைவர்

# கலாநிதி த.கலாமணி அவர்களின்
# இரண்டாம் ஆண்டு அஞ்சலிகள்



தோற்றம் 12 - 11 - 1951

மறைவு 09 - 02 - 2024

பல்துறை வல்லோனாக, பௌதிகவியல் ஆசானாக, பௌதிகவியல் விரிவுரையாளராக, கல்வியியல் கலாநிதியாக, முதுகல்வியியல்மாணிப் பட்டப்படிப்புக் கல்வியின் இணைப் பாளராக, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவராக, கல்வியியல் ஆய் வாளராய், சிறுகதையாசிரியராக, கவிஞராக, விமர்சகராக, உளவியல் ஆய்வாளராக, பக்தி எழுத்தாளராக, இலக்கிய- ஆன்மிகசொற்பொழிவாளராக, தொலைக்கல்வி விரிவுரை யாளராக, ஆசிரியராக, இறுவட்டுப் பாடகராக, பதிப்பாசிரியராக, தொகுப்பாசிரியராக, இசை நாடக நடிகனாக, சிறந்த துடுப்பாட்ட வீரனாக, அண்ணாவியராக, குறும்பட நடிகனாக, சோதிடராக, மொழிபெயர்ப்பாளராக, காத்தவராயர் தேவஸ்தான பிரதம குருவாக, இசை நாடகக் கோனாக, நற்றமிழ் காவலனாக, கல்வியியல் ஆய்வுக் கதிரோனாக, கலை ஞான வாரிதியாக, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியின் போசகராக, அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் கோயில் தலைவராக, அல்வாய் மனோகரா சனசமூக செயலாளராக- கலை இலக்கியச் செயலாளராக, அவையின் ஸ்தாபகராக, மனோகராவின் சிறந்த பிரஜையாக, கடல் சஞ்சிகையின் ஆலோசகராக, சந்தைப்படுத் தல் உத்தியோகத்தராக, நாட்டார் வழக்கியற்கழகத்தின் தலைவராக, மனோகர கான நாடகசபாவின் தலைவராக, ஜீவநதியின் பதிப்பாசிரியராக, கல்வியியற்துறை விரிவுரை யாளராக தன் ஆளுமையால் மாணவர்கள், கலைஞர்கள், மக்கள் மனதில் இடம் பிடித்து வாழ்ந்த பெருந்தகையின் இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலிகள்.

**குடும்பத்தினர்:**
**திருமதி கு.கலாமணி, க.பரணீதரன்-ப.விஷ்ணுவர்த்தினி,**
**க.முரளீதரன்-மு.லக்சனா, க.மதனாகரன்-ம.கிருஷாந்தி**

(6782)

# மணிவிழா வாழ்த்து!

## திருமதி. சுகந்தி அன்ரனி தவச்செல்வம்

BA (Hons), PGDE (Merit), M.Ed




**ஆசிரியர் கல்வியியலாளர் சேவை [தரம் 1]**
**விரிவுரை இணைப்பாளர் [தொடருறு கல்வி],**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய்**
**09.02.2026**

### சேவை விபரம்

★ யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை,
**பட்டதாரிப் பயிற்சி ஆசிரியர்**
*01.09.1993 – 31.08.1994*

★ யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை,
**ஆசிரியர்**
*01.09.1994 – 30.04.2000*

★ யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி,
**இணைக்கப்பட்ட விரிவுரையாளர்**
*01.05.2000 – 28.12.2008*

★ வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி,
**விரிவுரையாளர் [இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவை]**
*29.12.2008 – 08.10.2012*

★ யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி,
**விரிவுரையாளர்**
**[இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவை]**
*09.10.2012 – 17.01.2026*

(C-4964)

**வாழ்த்துவோர்-**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிச் சமூகம்.**

### பீடாதிபதி இராசையா லோகேஸ்வரன் அவர்களின் வாழ்த்துச் செய்தி

34 வருட கால அரச சேவையில் பணியாற்றி ஓய்வினைப் பெற்றுக்கொண்ட யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி யின் ஆசிரிய கல்வியாளரான திருமதி.சுகந்தி அன்ரனி தவச்செல்வம் அவர்களின் மணிவிழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மனமகிழ்வடைகின்றேன். 60 ஆண்டுகள் என்பது வெறுமனே எண்ணிக்கை அல்ல. இது அவரது வாழ்க்கையின் மற்றவர்களுக்கான எடுத்துக்காட்டு! இந்த 60 இற்குள் எத்தனை இன்பம்,எத்தனை துன்பம், எத்தனை எழுச்சி, எத்தனை வீழ்ச்சி அனைத்தையும் தாண்டி அடுத்தவர் மனம் நோகாமல் தனது நோக்கத்தை நேர்த்தியாக அடைந்த வீரப்பெண் இவர்!

கல்லூரி, குடும்பம், சமூகம் என வெவ்வேறு சூழலில் தன்னை தனித்துவமாக வெளிக்காட்டியவர். யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி என்றாலே அதற்கு ஒரு தனித்துவம் உண்டு. அப்படிப்பட்ட தனித்துவமிக்க கல்லூரிக்கு அடித் தளமாக, தூணாக நின்று 2000 ஆம் ஆண்டுகளில் இருந்து இன்றுவரை அயராது உழைத்துள்ளார். 1993இல் அரச பணியை பெற்று தொடர்ந்து பணியாற்றி கடந்த 17.01. 2026 இல் ஓய்வு பெற்றாலும் அவரது தோற்றமும் ஏற்ற மும் ஒரு துளியேனும் மாற்றம் அடையவில்லை. அத் தனை அருமையாக தனது சேவையை ஆற்றினார்.

கல்லூரியிலே மாணவ ஆசிரியர்களிடம் இவருக்கென்று ஒரு தனித்துவமான மரியாதை, அன்பு காணப்படும். பிள் ளைகளின் தேவைகளைத் தானாகவே அறிந்து நிறை வேற்றுவதில் வல்லவர். பெண் மாணவ ஆசிரியர்களின் விடுதி காப்பாளராக மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்பட் டவர். 25 ஆண்டுகள் கல்லூரியில் சேவையாற்றினாலும் இவருக்கு எதிரான மனப்பாங்கில் ஒருவரைக் கூட இனங் காட்ட முடியாது. அத்தனை அருமையாகத் தனது சேவையை நிறைவு செய்திருக்கின்றார். தனது சேவையின் இறுதிக் காலங்களில் கூட பொறுப்புகளை மறுக்காமல் தொடருறு கல்வியின் இணைப்பாளராக தனது சேவையினை ஆற்றிச் சென்றார்.

தனது செயலினூடாகவும், சேவையினூடாகவும், நன்ன டத்தையூடாகவும் ஒவ்வொரு நொடியும் பிறருக்கு ஏதாவது ஒன்றைக் கற்பித்துக் கொண்டே இருப்பார். இவருக்கு வயது தான் 60ஐ எட்டியது! ஆனால் மனதும் செயலும் 16 இல் தான் உள்ளது! மணிவிழா நாயகி, என்றும் இப் புன் னகையோடு இனிவரும் ஆண்டுகளையும் மகிழ்வோடு இறைவனது ஆசியோடு தொடர மனமார, உளமார வாழ்த்து கின்றேன். வாழ்க நீடூழி வாழ்க!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லண்டனுக்கு பயணமாகவுள்ள நைஜீரிய ஜனாதிபதி



(லண்டன்)

பிரித்தானிய மன்னர் மூன்றாம் சார்ள்ஸ் மற்றும் ராணி கமிலா ஆகியோரின் அழைப்பை ஏற்று, நைஜீரிய ஜனாதிபதி போலா டினுபு மார்ச் மாதம் லண்டனுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்ளவுள்ளதாக பக்கிங்ஹாம் அரண்மனை அறிவித்துள்ளது.

அதன்படி நைஜீரிய ஜனாதிபதி மற்றும் முதல் பெண்மணி ஒலுரேமி டினுபு ஆகியோர் எதிர்வரும் மார்ச் மாதம் 18 ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரை லண்டனில் தங்கியிருப்பார். இதன்போது விண்ட்சர் கோட்டையில் மன்னரின் விருந்தினராக அவர் தங்கியிருப்பார். 37 ஆண்டுகளுக்குப் பின்னர் நைஜீரிய ஜனாதிபதி ஒருவர் பிரித்தானியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்வது இதுவே முதல் முறையாகும்.

மன்னர் சார்ள்ஸ் நைஜீரியாவுடன் நீண்டகாலத் தொடர்பைக் கொண்டுள்ளார். அவர் இளவரசராக இருந்தபோது நான்கு முறை நைஜீரியாவுக்கு சென்றுள்ளார்.

இந்த வருகை "சமூகமான அதிகார இராஜ தந்திரத்தின்" ஒரு பகுதியாகக் கருதப்படுகிறது.

நைஜீரியா ஆபிரிக்க கண்டத்தில் பிரித்தானியாவின் மிக முக்கியமான பொருளாதாரப் பங்காளர்களில் ஒன்றாகத் திகழ்வதால் இந்த வருகை உறவுகளை மேலும் வலுப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. (3)

# ரஷ்யா-உக்ரை

# ஜூன் மாதத்திற்கு

## அமெரிக்காவின் அழைப்புக்கு உ

**(கீவ்)**

**உக்ரைன் - ரஷ்யா இடையிலான ஆண்டு ஜூன் மாதத்திற்குள் முடி விரும்புவதாக உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.**


உக்ரைன் மற்றும் ரஷ்ய பிரதிநிதிகள் அடுத்த வாரம் அமெரிக்காவின் மியாமியில் சந்தித்துப் பேச அமெரிக்கா அழைப்பு விடுத்துள்ளது. இந்த அழைப்பை உக்ரைன் ஏற்றுக் கொண்டுள்ளதாக ஜெலென்ஸ்கி உறுதிப்படுத்தியுள்ளார்.

எனினும் ரஷ்யாவின் கருத்து இன்னும் வெளியாகவில்லை. இந்தச் சந்திப்பு நடந்தால், அது, உக்ரைன் போர் நிறுத்தம் தொடர்பில் அமெரிக்க மண்ணில் நடைபெறும் முதல் நேரடிப் பேச்சுவார்த்தையாக அமையும்.

அமெரிக்காவில் வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள இடைத் தேர்தல் காரணமாக, அதற்கு முன்னதாகவே ஜூன் மாதத்திற்குள் ஒரு தீர்வை எட்ட டொனால்ட் ட்ரம்ப் நிர்வாகம் விரும்புவதாக

# இந்திய வரைபடத்தில் அதிரடி காட்டிய அமெரிக்கா

## உலகரங்கில் பரபரப்பு




(வோஷிங்டன்)

வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக அமெரிக்கா வெளியிட்ட இந்திய வரைபடம் சீனா மற்றும் பாகிஸ்தானுக்கு அதிர்ச்சி அளிக்கும் வகையில் அமைந்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன

உத்தியோகபூர்வமாக, வெளியிடப்பட்டுள்ள இந்த விளக்கப்படத்தில், ஜம்மு காஷ்மீர் முழுவதையும் இந்தியாவின் ஒரு பகுதியாக அமெரிக்கா காட்டியுள்ளதாக, இந்திய ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

இதன்படி பாகிஸ்தானின் ஆளுகைக்கு உட்பட்ட காஷ்மீரும், இந்தியப் பகுதியாகக் காட்டப்பட்டுள்ளது.

முன்னதாக, ஜம்மு-காஷ்மீர் விவகாரம் தொடர்பாக, பாகிஸ்தான் பிரதமர் ஷபாஸ் ஷெரீப், இராணுவத் தளபதி ஆசிம் முனீர் ஆகியோர் வோஷிங்டனுக்கு பலமுறை பயணம் செய்து அமெரிக்காவின் ஆதரவைப்பெற முயற்சி செய்தனர்.

அத்துடன், சர்வதேச அளவில் காஷ்மீர் பிரச்சினையை எழுப்ப பாகிஸ்தான் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.


இந்நிலையிலேயே, அமெரிக்கா வெளியிட்டுள்ள புதிய வரைபடத்தில் பாகிஸ்தானின் ஆளுகைக்கு உட்பட்ட காஷ்மீர் இந்தியாவின் ஒரு பகுதியாகக் காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, சீனாவின் வசம் உள்ள அக்சய் சின் பகுதியும் இந்திய நிலப்பரப்பாக, குறித்த வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்திய - அமெரிக்க வர்த்தக ஒப்பந்தத்தை விளக்கும் கிராஃபிக்கல் ரெப்ரசன்டேஷன்களில் இந்தியாவின் வரைபடம் இந்தியா விரும்பும்படி அமைந்துள்ளது.

ஒருவேளை அமெரிக்கா தெரிந்தே இந்த வரைபடத்தைப் பயன்படுத்தி இருக்குமேயானால், இது இந்திய நிலைப்பாட்டில் அமெரிக்கா ஒத்துப்போகிறது என்பதைத் தெளிவாக பாகிஸ்தான், சீனாவுக்கு உணர்த்தும் சமிக்ஞை என்று [illegible] (3)

## ஒலிம்பிக் கால போர் நிறுத்தம் போப் அழைப்பிற்கு உக்ரைன் ஆதரவு



(கீவ்)

ஒலிம்பிக் போட்டிகளை முன்னிட்டு தற்காலிகப் போர் நிறுத்தத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்ற போப் ஆண்டவரின் அழைப்பிற்கு உக்ரைன் தனது ஆதரவைத் தெரிவித்துள்ளது.

மிலன்-கோர்டினா குளிர் கால ஒலிம்பிக் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றது.

இந்தநிலையில், உலக அமைதியை வலியுறுத்திப் போப் பிரான்சிஸ் விடுத்த கோரிக்கையை ஏற்றுக் கொள்வதாக உக்ரைன் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

ஒலிம்பிக் திருவிழாவின் போது வன்முறைகளைத் தவிர்த்து, மனிதாபிமான அடிப்படையில் அமைதிக்கான எந்தவொரு ஆக்க பூர்வமான முயற்சிகளையும் தாங்கள் வரவேற்பதாக உக்ரைன் அரசு குறிப்பிட்டுள்ளது.

இந்த விவகாரத்தில் ரஷ்யாவின் நிலைப்பாடு குறித்து இதுவரை எவ்வித தெளிவான தகவல்களும் வெளிவரவில்லை என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அத்தோடு, இக்கோரிக்கையை ரஷ்யா ஏற்குமா என்பது சந்தேகத்திற்குரியதாகவே உள்ளதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

நாடுகளுக்கிடையிலான நட்புறவை வளர்க்கும் தளமான ஒலிம்பிக் போட்டிகளின் போது மேற்கொள்ளப்படும் இப்போர் நிறுத்தம், போரினால் பாதிக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்குப் பெரும் ஆறுதலாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

போப் ஆண்டவரின் இந்த அமைதி முன்னெடுப்புக்கு உலகத் தலைவர்கள் பலரும் தங்களது ஆதரவை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரன் போருக்கு
# துள் முடிவு
## டக்ரைன் சம்மதம்

ன போரை இந்த
டிக்க அமெரிக்கா
தி வோலோடிமிர்




ஜெலென்ஸ்கி குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில், சமீபத்தில் அபுதாபியில் நடந்த இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தையில் பெரிய அளவில் முன்னேற்றம் ஏற்படவில்லை.

நிலப்பரப்புகளை விட்டுக் கொடுப்பது போன்ற கடினமான முடிவுகளில் இன்னும் சிக்கல் நீடிக்கிறது. பேச்சுவார்த்தையில் உடன்பாடு எட்டப்படாவிட்டாலும், இரு நாடுகளும் போர்க் கைதிகளைப் பரிமாறிக்கொண்டன.

இதேவேளை, ஒருபுறம் அமைதிப் பேச்சுவார்த்தை நடந்தாலும், ரஷ்யா உக்ரைனின் மின் கட்டமைப்புகள் மீது தொடர்ந்து ஏவுகணைத் தாக்குதல் நடத்தி வருகிறது. இதனால் கடும் குளிரிலும் மக்கள் மின்சாரமின்றி தவித்து வருகின்றனர். (3)

# ஒபாமா தம்பதியினரை அவமதிக்கும் காணொளி
## ட்ரம்ப் விளக்கம்



(வோஷிங்டன்)

முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமா மற்றும் அவரது மனைவி மிச்செல் ஒபாமா ஆகியோரை அவமதிக்கும் வகையிலான இனவாதக் கருத்துக்களைக் கொண்ட காணொளி ஒன்றை ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தனது சமூக வலைத்தளப் பக்கத்தில் பகிர்ந்தமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

ட்ரம்பின் "ட்ரூத் சோஷியல்" தளத்தில் பகிரப்பட்ட இந்தக் காணொளியில், ஒபாமா தம்பதியினரின் முகங்கள் குரங்குகளின் உருவங்களுடன் இணைத்துக் காட்டப்பட்டுள்ளன.

இந்தக் காணொளி பகிரப்பட்ட சில மணிநேரங்களில் சமூக வலைத்தளங்களில் கடும் எதிர்ப்பு கிளம்பியது. ஜனநாயகக் கட்சியினர் மட்டுமன்றி, குடியரசுக் கட்சியின் சில உறுப்பினர்களும் இதற்குத் தங்களின் கண்டனங்களை வெளியிட்டனர். இதனைத் தொடர்ந்து அந்தப் பதிவு நீக்கப்பட்டது.

குறித்த விடயம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த வெள்ளை மாளிகை, இந்தத் தவறு ஒரு ஊழியரால் தவறுதலாக இழைக்கப்பட்டதாகவும், ட்ரம்ப் அதனைப் பார்த்திருக்கவில்லை என்றும் குறிப்பிட்டிருந்தது.

எனினும், செய்தியாளர்களின் கேள்விக்கு பதிலளித்த ட்ரம்ப், இந்தக் காணொளியை பகிருமாறு தான் பணிப்புரை விடுத்ததாக ஒப்புக் கொண்டார். ஆனால், அதிலிருந்த குறிப்பிட்ட அந்த இனவாதப் பகுதியைத் தான் கவனிக்கவில்லை எனக் கூறியுள்ளார்.

கறுப்பினத்தவர்களின் வரலாற்றைக் கொண்டாடும் மாதத்தில் இவ்வாறானதொரு இனவாதச் சித்தரிப்பு பகிரப்பட்டமை அமெரிக்க அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (3)



# திருமண நிகழ்விற்கு சென்ற பஸ் பள்ளத்தில் கவிழ்ந்து விபத்து
## 13 பேர் உயிரிழப்பு



(காத்மண்டு)

நேபாளத்தின் மேற்கு பகுதியான சுதூர்பச்சிம் மாகாணத்தின் பைதடி மாவட்டத்தில் இடம்பெற்ற பஸ் விபத்தில் 13. பேர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் 34 பேர் காயமடைந்துள்ளனர்.

திருமண நிகழ்வுக்காக பைதடி நகரின் பாவ்னி கிராமத்திலிருந்து பாஜங் நகரின் சன்குடா கிராமத்தை நோக்கி பயணித்த பஸ், மலைப்பாதையில் சென்றுகொண்டிருந்த போது சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து சுமார் 150 முதல் 200 மீற்றர் ஆழமுள்ள பள்ளத்தில் கவிழ்ந்து விபத்திற்குள்ளாகியுள்ளதாக நேபாள பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்து கடந்த வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றதாகவும் சம்பவ இடத்திலேயே 6 பேர் உயிரிழந்ததாகவும், மேலும் 7 பேர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்ததாகவும் பைதடி மாவட்ட பொலிஸ் துறை உறுதிப்படுத்தியுள்ளது.

இந்த விபத்தில் பஸ்ஸில் பயணித்த 34 பேர் காயமடைந்துள்ளதுடன், அவர்களில் பலரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதனால், உயிரிழப்புகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது.

காயமடைந்தவர்கள் அருகிலுள்ள வைத்தியசாலைகளுக்கு அவசரமாக கொண்டு செல்லப்பட்டுள்ளதுடன், மீட்புப் பணிகள் சம்பவம் இடம்பெற்றவுடன் ஆரம்பிக்கப்பட்டதாக பொலிஸ்துறை தெரிவித்துள்ளது.

பஸ்ஸின் சாரதிக்கு லேசான காயங்கள் ஏற்பட்டுள்ளதாகவும், அவரை பொலிஸார் விசாரணைக்கு அழைத்துச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆரம்பக்கட்ட விசாரணைகளின் படி, அனுமதிக்கப்பட்ட அளவை விட அதிகமான பயணிகளை ஏற்றிச் சென்றதே விபத்துக்கான பிரதான காரணமாக இருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

திருமண நிகழ்வு முடிந்து மணமகன் கிராமத்தை நோக்கி பஸ் பயணித்த போதும், மணமகனும் மணமகளும் வேறு வாகனத்தில் பயணித்ததால் அவர்கள் இந்த விபத்தில் இருந்து உயிர் தப்பியுள்ளனர்.

நேபாளத்தில் குறுகிய மலைப்பாதைகள், சரியான பராமரிப்பின்றி உள்ள வாகனங்கள் மற்றும் மோசமான வீதித்தர நிலைகள் காரணமாக அடிக்கடி பஸ் விபத்துகள் இடம்பெற்று வருவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெப்ரவரி மாத இராசி பலன்கள்

## ஆன்மிகத்தில் நாட்டம் உண்டாகும்!



**கிரகநிலை-** சுக ஸ்தானத்தில் சூரியன், செவ்வாய், சுக்கிரன் - பஞ்சம ஸ்தானத்தில் புதன், சனி, ராகு - பாக்கிய ஸ்தானத்தில் குரு(வ) - லாப ஸ்தானத்தில் கேது என கிரக நிலைகள் உள்ளன.

**பலன்கள்:** நியாயமாகவும், நேர்மையாகவும் எதையும் செய்து முடிக்கும் குணமுடைய துலா இராசி அன்பர்களே! இந்த மாதம் வாழ்க்கையில் நல்ல திருப்பம் ஏற்படும். பயணங்கள் மூலம் இலாபம் கிடைக்க செய்யும். மனதில் மகிழ்ச்சி ஏற்படும் படியான காரியங்கள் நடக்கும். ஆன்மிகத்தில் நாட்டம் உண்டாகும். மனோ தைரியம் அதிகரிக்கும். புத்தி தெளிவு உண்டாகும். தொழில் வியாபாரம் திருப்தி கரமாக நடக்கும்.

தொழில் தொடர்பான விடயங்கள் அனுகூலமாக நடக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் முன்னேற்றம் காண்பார்கள். சிலருக்கு எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கும். குடும்பத்தில் சந்தோஷமான நிலை காணப்படும். கணவன், மனைவிக்கு இடையே இருந்த கருத்து வேற்றுமை நீங்கும். உறவினர்கள் மூலம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும்.

பிள்ளைகள் மனம் மகிழும் படி தேவையான பொருட்களை வாங்கி கொடுப்பீர்கள். விருப்பங்கள் கை கூடும். பெண்களுக்கு மனம் மகிழும்படியான காரியங்கள் நடக்கும். அரசியல்வாதிகள் கட்சிப் பிரச்சினைகளில் இருந்து ஒதுங்கி இருப்பது நல்லது. கலைத்துறையினர் புதிய வாய்ப்புகளில் வெற்றி அடைவர். மாணவர்கள் சில நுணுக்கங்களைக் கற்றுத் தெளிவீர்கள்.

**சித்திரை 3, 4ஆம் பாதங்கள்:** இந்த மாதம் அடுத்தவரை நம்பி காரியத்தில் இறங்கும் போது கவனம் தேவை. தொழில் வியாபாரம் தொடர்பான சிறிய பிரச்சினைகளை சந்திக்க வேண்டி இருக்கும். தடைகளை தாண்டி முன்னேறுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் எந்த பணியை முதலில் முடிப்பது போன்ற குழப்பத்திற்கு ஆளாக வேண்டி இருக்கும். மனதில் தோன்றும் ஆசைகள் அனைத்தும் முழுமையான அளவிற்கு வெற்றி அடையும்.




**சுவாதி:** இந்த மாதம் குடும்பத்தில் இருப்பவர்களால் வீண் பிரச்சினை, குழப்பம் போன்றவை ஏற்பட்டு பின்னர் நீங்கும். கணவன், மனைவிக்கு இடையே திடீர் கருத்து வேற்றுமை தோன்றலாம். பிள்ளைகளிடம் பேசும் போது எச்சரிக்கை தேவை. உறவினர்களிடம் எந்த உறுதியையும் தராமல் இருப்பது நல்லது. இழுபறியாக இருந்த அரசாங்க வேலைகள் இப்போது முடிவுக்கு வரும். எதிர்பார்த்திருந்த இடத்தில் பணவரவு உண்டாகும்.

**விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்:** இந்த மாதம் அடுத்தவர்களுக்கு உதவிகள் செய்வதில் சங்கடமான சூழ்நிலை உண்டாகும். சமாளித்து முன்னேறும் திறமை இருக்கும். மாணவர்கள் கல்வியில் முன்னேற வேண்டும் என்று பாடுபடுவீர்கள். போட்டிகள் சாதகமான பலன் தரும். பண வரவு இருக்கும். உறவினரால் அதிக அனுகூலம் இருக்கும். கஷ்டங்கள் குறையும். வேலை பார்க்கும் இடத்தில் பொறுப்புகள் அதிகரிக்கும். பெரிய பதவிக்கு உங்கள் பெயர் பரிந்துரைக்கப் படும்.

**பரிகாரம்:** குல தெய்வத்தை வணங்க குடும்பப் பிரச்சினை, தொழில் பிரச்சினை கல்வியில் தடை போன்றவை விலகும். எதிலும் நன்மை உண்டாகும்.

**அதிஷ்ட கிழமைகள்:** செவ்வாய், வெள்ளி.

**சந்திராஷ்டம தினங்கள்:** 24, 25.

**அதிஷ்ட தினங்கள்:** 03, 04

## தொழில் வியாபாரம் நன்றாக இருக்கும்!



**கிரகநிலை-** தைரிய ஸ்தானத்தில் சூரியன், செவ்வாய், சுக்கிரன் - சுக ஸ்தானத்தில் புதன், சனி, ராகு - அஷ்டம ஆயுள் ஸ்தானத்தில் குரு(வ) - தொழில் ஸ்தானத்தில் கேது என கிரக நிலைகள் உள்ளன.

**பலன்கள்:** நன்மை தீமைகள் பற்றி ஆலோசித்து முடிவு எடுக்கும் விருச்சிக இராசி அன்பர்களே! இந்த மாதம் வீடு - மனை - வாகனம் சம்பந்தமான காரியங்களில் எதிர் பார்த்த பலன்கள் கிட்டும். காரிய தடை தாமதம் ஏற்படும். எதிர் பார்த்தபடி எதுவும் நடக்காமல் இழுபறியாக இருக்கும். மனம் மகிழும் படியாக எல்லாம் நடந்து முடியும். தொழில் வியாபாரம் நன்றாக இருக்கும்.

பழைய பாக்கிகள் வசூலாவதில் வேகம் இருக்கும். கொடுக்கல், வாங்கலில் இருந்த சுணக்க நிலை மாறும். பண வரத்து இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு அலுவலகம் தொடர்பான பயணம் செல்ல வேண்டி இருக்கலாம். குடும்பத்தில் இருந்து வந்த மனம் நோகும் படியான சூழ்நிலைகள் மாறும். ஆனாலும் அனைத்து விடயங்களிலும் நீங்கள் அனு சரித்து செல்வது நல்லது.

கணவன் மனைவிக்கு இடையே மனவருத்தம் ஏற்பட்டு நீங்கும். பெண்கள் எடுத்த காரியத்தை வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். அரசியல்வாதிகளின் செல்வாக்கு உயரும். கலைத்துறையினர் புதுமையான சில படைப்புகளை வெளியிட்டு அனைவரின் கவனத்தையும் ஈர்ப்பர். மாணவர்களுக்கு கல்வியில் நன்மைகள் ஏற்படும்.

**விசாகம் 4ஆம் பாதம்:** இந்த மாதம் ஆழ்ந்த யோசனையும், அனுபவ அறிவையும் கொண்டு எதையும் சாதிக்க முயற்சிப்பீர்கள். உடல் ஆரோக்கியத்தில் கவனம் அவசியம். எந்த காரியத்தை செய்தாலும் அதில் வேகத்தை காட்டாமல் மெத்தனமாகவே செய்ய தோன்றும். அரசாங்க வேலைகளும் அனுகூலமாக இருக்கும். சகோதரர்களுக்கு இடையே இருந்துவந்த பிரச்சினைகள் அகலும்.

**அனுஷம்:** இந்த மாதம் தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்களுக்கு தொழில் தொடர்பான வீண் அலைச்சல் உண்டாகும். பண வரத்து தாமதப்பட்டாலும் வந்து சேரும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வேலை தொடர்பான கவலை உண்டாகும். சக ஊழியர்களுடன் அனுசரித்து செல்வது நல்லது. சகோதரருக்கு திருமணம் முடியும். குடும்பத்தில் சின்ன சின்னப் பிரச்சினைகள் தோன்றி மறையும். விட்டுக் கொடுத்து நன்மையைப் பெறுங்கள்.




**கேட்டை:** இந்த மாதம் குடும்ப விடயமாக அலைய வேண்டி இருக்கும். கணவன் மனைவிக்கு இடையே இருக்கும் நெருக்கம் குறையும். தாய், தந்தையரின் உடல் நலத்தில் கவனம் தேவை. எதிலும் உற்சாகம் குறைந்து சோம்பல் ஏற்படும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களைக் கவர சில சலுகைகளை அறிவிப்பீர்கள். பாக்கிகள் வசூலாகும். புது பங்குதாரர் இணைவார். எதிர்பார்த்த இலாபம் வரும். புதிய யுக்திகளைக் கையாள்வீர்கள்.

**பரிகாரம்:** திருமுருகாற்று படையை பாராயணம் செய்து வர கந்தன் அருளால் கண்டபிணி நீங்கும். குடும்ப கஷ்டம் தீரும்.

**அதிஷ்ட கிழமைகள்:** செவ்வாய், வெள்ளி.

**சந்திராஷ்டம தினங்கள்:** 26, 27.

**அதிஷ்ட தினங்கள்:** 05, 06, 07.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## மாதவிடாய் நின்றபின் இயற்கை உணவுகளின் முக்கியத்துவம்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்



பெண்களுக்கு ஈஸ்ரஜன் ஹோமோன் சுரப்பியினால் நிறைய நன்மைகள் உண்டு.

பொதுவாக ஆண்களுக்கு 35-45 வயதிற்குள் மாரடைப்பு அபாயம் கூடுதலாக உண்டு.

ஆனால் பெண்களுக்கு ஈஸ்ரஜன் ஹோமோன் பாதுகாக்கின்றது. கொழுப்பு இருதயத்தில் படிவதையும் தடுக்கின்றது.

மாதவிடாய் சக்கரம் ஒழுங்காக நடப்பதற்கும் உதவுகிறது. கரு முட்டைகள் ஒவ்வொரு மாதவிடாய்ச் சக்கரத்திலும் ஒழுங்காக வெளி வருவதற்கு உதவிபுரிகிறது.

பெண்கள் உடல் எடை அதிகரிக்க விடாமல் உதவி புரிகிறது. என்புகளுக்கு வன்மையை கொடுக்கிறது.

தோல் வறண்டு போகாமல் பாதுகாக்கின்றது. அத்துடன் முடிகள் ஆரோக்கியமாக இருப்பதற்கும் புரொஜெஸ்தரோன், ஈஸ்ரஜன் ஹோமோன்கள் உதவி புரிகின்றன.

இவ்வளவு நன்மைகள் உள்ள இந்த இரண்டு ஹோமோன்களும் பெண்களுக்கு மாதவிடாய் நின்ற பின்பு கிட்டத்தட்ட 48-55 வய தெல்லைக்கு பின்பு இவ் இரண்டு ஓமோன்களின் அளவும் குறைகின்றது. மேற்சொன்ன எல்லா நன்மைகளுக்கும் எதிராக உடலை பாதிக்க தொடங்குகிறது. கல்சியம் சத்துக்கள் குறைகிறது.

என்புகள் உறுதித் தன்மையை இழக்கின்றது. தூக்கமின்மை ஏற்படும். உடல் எல்லாம் உஷ்ணமாக ஆரம்பிக்கும். மாதவிடாய் சிலருக்கு ஒழுங்கின்மையாக 6 மாதம், 3 மாதங்கள் வராமல் ஒழுங்கின்மையை ஏற்படுத்தலாம் அல்லது குறுகிய நாட்களில் (Short period) மாதவிடாய் ஏற்படலாம்.

உடல் எடை அதிகரிக்கலாம். ஈஸ்ரஜன் ஹோமோன் குறைவினால் இருதயத்தில் கொழுப்புப் படியலாம், தோல்கள் வறண்டு வயதான தோற்றம் ஏற்படலாம்.

உடல் அனுசேபம் கூட குறைய ஆரம்பிக்கலாம். சிறுநீரை கட்டுப்படுத்த முடியாமல் சிறுநீர் சடுதியாக வெளியேறலாம்.

ஏனெனில் சிறுநீர்க் குழாய்களை சுற்றியுள்ள தசைகள் வலுவிழப்பதனால் ஆகும்.

மனநிலையில் அழுத்தம் ஏற்படலாம். எவ்வளவு பிரச்சினைகள் ஏற்படும் போதும் முதலில் உணவுகள் மூலம் இப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணலாம். பொதுவாக கல்சியம் சத்துள்ள உணவுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். அதாவது தினசரி உணவில் பால்,தயிர், நெய் இதில் ஏதாவது ஒன்றை சேர்த்துக் கொள்ள வேண்டும்.

இரண்டாவதாய் ,ஈஸ்ரஜன் சத்துள்ள உணவுகளை கட்டாயமாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

சுண்டல், சோயாபீன்ஸ் இது இரண்டையும் சேர்த்துக் கொள்ளலாம், இதனை ஸ்னாக்ஸாக எடுத்துக் கொள்ளலாம். கோலிபிளவர், புரோகோலி இது இரண்டையும் காய்கறிவகை உணவாக எடுத்துக் கொள்ளலாம்.

திராட்சை, பிளம்ஸ் இவை இரண்டும் பழங்கள். இவ் ஆறு வகையான உணவுக் கூறுகளிலும் ஈஸ்ரஜன் சத்து அதிகமாக உண்டு. எனவே இவ் 6 உணவுக் கூறுகளையும் மாதவிடாய் நின்ற பின்பு உங்கள் உணவுகளில் ஒழுங்காக சேர்த்துக் கொள்ள வேண்டும்.

இவற்றை விட ஒமேகா-30 கொழுப்பு அமிலங்கள் உள்ள உணவுகளை அதிகம் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

இச் சத்துக்கள் மீன்களில் அதிகமாக உண்டு. ஆழிவிதை, அலசி விதைகளை நீரில் ஊறவிட்டு அருந்தலாம். இம் மூன்று வகை உணவுகளையும் தினசரி உணவில் மாதவிடாய் நின்ற பின்பு கட்டாயமாக சேர்த்துக் கொள்ள வேண்டும்.

இனிப்பு வகைகள், எண்ணெய் சேர்ந்த உணவுகளை கட்டாயமாக தவிர்க்க வேண்டும்.

ஏனெனில் இக் காலங்களில் ஈஸ்ரஜன் ஹோமோனின் பாதுகாப்பு இன்மையால் உடல் எடை அதிகரிக்கும். என்வே மேற் கூறியவற்றை தவிர்த்து உடல், உழைப்பை அதிகரிக்கச் செய்ய வேண்டும்.

அதற்காக யோகாசனம், நடைப் பயிற்சி மேற்கொள்ள வேண்டும்.20-25 நிமிடங்களாவது உடற்பயிற்சி, நடைப்பயிற்சி மேற்கொள்ள வேண்டும். காலையில் 10தொடக்கம் 15 நிமிடங்கள் வரை யோகா, தியானப் பயிற்சி மேற் கொள்வது சிறந்ததாகும்.

அத்துடன் நமது உணவு சரி விகித உணவாக இருக்க வேண்டும். அதாவது புரதச்சத்து அதிகமாகவும் மாச்சத்து குறைவாகவும், காய் மரக் கறி வகைகள், பழங்கள் அதிகமாக வும் உள்ளமாதிரி உங்களது உணவுப்பட்டியலை அமைத்துக் கொள்ள வேண்டும். இரவு நன்றாக தூங்க வேண்டும்.

முழுத்தானிய உணவுகளையும் சேர்க்கலாம். உப்பு மற்றும் காரமான உணவுகளை தவிர்ப்பது சிறந்தது. பாதாம், வால்நட் போன்ற விதைகளையும் சேர்க்கலாம். உடல் வறட்சியை தடுக்க நாள் ஒன்றிற்கு 8-10 கிளாஸ் தண்ணீர் குடிக்க வேண்டும்.

காரமான உணவுகளை இரவு நேர வியர்வை(night sweats) மற்றும் உடற்சூட்டை (hot flashes) அதிகரிக்கலாம். என்றும் ஈஸ்ரஜன் செயற்பாடுகளை அதிரிக்கும் ஒரு உணவுக்கூறாகும். உள்ளி ஒரு சிறந்த ஆன்டி-ஆக்சிடென்ட் ஆகும். இது ஈஸ்ரஜன் வளர்ச்சி மாற்றத்தில் முக்கிய பங்குவகிக்கின்றது. பேரீச்சம்பழத்திலும் ஈஸ்ரஜன் போன்ற சேர்மானங்களும் உண்டு. எனவே மேற்கூறிய இயற்கை உணவுப் பழக்க வழக்கங்களை பெண்கள் மாதவிடாய் நின்ற பின்பு கட்டாயமாக கடைப்பிடிக்க வேண்டும்.

# இராசிபலன்

09.02.2026
தை 26, திங்கட்கிழமை
சப்தமி காலை 6.59 மணிவரை

சுவாதி காலை 6.55 மணிவரை
சுப நேரம் -12.35-2.05 மணிவரை
இராகு காலம் 8.05-9.35 மணிவரை

சந்திராஷ்டமம்
ரேவதி.

வளவன்




விருப்பங்கள் நிறைவேறும் நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், சான்றோர்களின் சநதிப்புகள் இடம் பெறலாம், பொது வாழ்வில் புகழ்கூடும்.




எளிதில் உணர்ச்சி வசப்படுவதை தவிர்ப்பது நல்லது, நினைத்தது நிறைவேறி நிம்மதி காணும் நாள், செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், போசன சகமுண்டு.




புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், போசன சுகமுண்டு.




சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, மனதில் நீண்ட நாட்களாக இருந்த பாரம் குறையும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.




குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட சிறப்படையும் நாள், சுப செய்திகள் வந்து சேரலாம்.




வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண் ணம் உருவாகும், பணியாளர் தொல்லை அகலும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பணப்புழக்கம் கூடும்.




குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் அகலும், பயணத்தால் பலனுண்டு, காரிய வெற்றிக்கு இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள்.




வீட்டுப் பிரச்சினைகள் சுமூகமாக அமையும், எடுத்த முயற்சிகளுக்கு கேட்ட இடத்தில் உதவி கிடைக்கும், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.




குடும்ப மகிழ்ச்சி மேலோங்கும், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீாகள், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பாக்கிகள் வசூலாகும் வாய்ப்புண்டு.




புதிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், அதிஷ்ட வாய்ப்புக்கள் அலை மோதும் நாள்.




பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், வீண் பழிகள் அகலும், ஆரோக்கியத்தில் முன்னேற்றமுண்டு, தொழில் ரீதியாக எடுத்த முயற்சிகளில் தாமதம் ஏற்படலாம்.




கவலைகள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், எதையும் ஒரு முறைக்கு பலமுறை யோசித்து செய்வது நல்லது, பிரயாண பயமுண்டு.

ஒருவனை அவனது நண்பரைக்கொண்டு அறியலாம்...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கல்கியின் பொன்னியின் செல்வன்
பாகம் - 4

காவியத் தொடர் 973





இரண்டு கைகளினாலும் கரிகாலர் அவளைத் தூக்கி அணைத்துக் கொண்டு படித் துறைப் படிகளில் ஏறி மேலே போய்ச் சேர்ந்து தரையில் மெதுவாக அவளை வைக் கும் வரையில் கண்ணை விழித்துப் பார்க்கவில்லை.

மூக்கில் சுவாசம் வரு கிறதா என்று கரிகாலர் விரலை வைத்துப் பார்த்த போது தான் கண்களை மெல்ல மெல்லத் திறந்தாள். திறக் கும்போதே வந்தியத்தேவ னிடம் தன் கரை காணாக் காதலைத் தெரிவிக்கும் பொரு ட்டு அன்பும் ஆர்வமும் ததும்பிய நோக்குடன் பார்த்தாள்.

அவளுடைய கண்ணின் முன் தெரிந்தவர் இளவரசர் கரிகாலர் என்று தெரி ந்ததும் துள்ளி எழுந்து நகர் ந்து உட்கார்ந்து கொண் டாள்.

அவளுடைய முகத்தில் அச்சமயம் தோன்றிய ஏமாற் றத்தைக் கவனித்த கரிகாலர் கலீர் என்று சிரித்தார்.

"மணிமேகலை! இது என்ன துள்ளல்? என்னைக் கண்டு இவ்வளவு அருவருப்பு ஏன்?" என்றார்.

ஐயா! வேற்று மனிதர் கை பட்டால் பெண்களுக்குக் கூச்சமாயிராதா? என்றாள் மணிமேகலை.

"பெண்ணே! என்னை வேற்று மனிதனாக்கி விட் டாயா? எனக்கும் உனக்கும் திருமணம் செய்து வைக்க ஏகப் பிரயத்தனம் நடக் கிறதே?" என்றார் கரிகாலர்.

"சுவாமி! அந்தப் பிரய த்தனம் பலித்த பிறகு தானே சொந்தமாக முடியும்? அதுவ ரையில் தாங்கள் வேற்று மனிதர்தானே?" என்றாள் மணிமேகலை.

"ஆனால் அது உனக்கு இஷ்டமா என்பதை நீ சொல் லலாம் அல்லவா?"

கடம்பூர் இளவரசி சற்று யோசித்துவிட்டு, "ஐயா! தாங்கள் சோழ குலத் தோன்றல் எல்லாம் அறிந்த புத்திமான். சிறு பெண்ணாகிய என்னிடம் இவ்விதம் பேசலாமா? என் தந்தையிடமல்லவா கேட்க வேண்டும்?" என்றாள்.

"பெண்ணே! உன் தந்தை சம்மதித்தால் நீ சம்மதிப் பாயா?" "என் தந்தை சம்ம தித்த பிறகு அவர் கேட்டால் சொல்லுவேன். தங்களிடம் இதைப் பற்றிப் பேசவே என க்குக் கூச்சமாயிருக்கிறது. புலி என்னைக் கொல்லா மலும், நான் தண்ணீரில் முழு கிப் போகாமலும் என்னைக் காப்பாற்றினீர்கள்.

அதனால் தங்களிடம் ஏற்ப ட்டுள்ள நன்றி காரணமாக இத்தனை நேரமும் பொறு மையாக இருக்கிறேன்..."

கரிகாலன் சிரித்துவிட்டு, "மணிமேகலை! நீ வெகு கெட்டிக்காரி. மிக அழுத்த மானவள். ஆனாலும் ஏமாந்து போனாய். அதற்காக என்னை ஏமாற்றப் பார்க்க வேண் டாம்!" என்றார்.

"ஐயா! இது என்ன வார் த்தை! தங்களை இந்த அறி யாப் பெண் ஏமாற்றுவதா? எதற்காக? எந்த முறையில்?"


"வீணாக ஏன் சுற்றி வளை த்துப் பேசுகிறாய்? எனக் குப் பதிலாக வந்தியத் தேவன் உன்னைத் தூக்கிக் கொண்டு வந்து கரை சேர்ந் திருந்தால் இவ்வளவு கொடூரமாகப் பேசுவாயா? வந்தியத்தேவன் என்று நினைத்துத்தானே நீ கண்ணை மூடிக் கொண் டாய்? அதே எண்ணத் துடன்தானே கண்ணைத் திறந்தும் பார்த்தாய்! பாவம்! ஏமாந்து போனாய்!" என்றான் கரிகாலன்.

(தொடரும்....)



## சிறுவர் அரங்கம்

## கொடியது குறுக்குவழி



முன்னொரு காலத்தில் ஓர் ஊரில் சிறுவன் ஒருவன் இருந்தான். அவன் தந்தை அவனைப் படிக்க வைக்கப் பல வகையில் முயன்றார். ஆனால் அவனோ படிப்பில் சிறிதும் நாட்டமின்றி இரு ந்தான்.

இப்படியே சில ஆண்டு கள் கழிந்தன. அவன் கல்வி அறிவு இல்லாதவனாகவே வளர்ந்தான். இதனால் ஊர் மக்களும் உற்றார் உறவினர் களும் அவனைக் கேலி யாகப் பேசினார்கள்.

இதைக் கேட்டு மனம் உடைந்த அவன், "கடுந்தவம் புரிந்தாவது கல்வி அறிவு பெற்றுத் திரும்புவேன் என்று உறுதி செய்தான்.

காட்டிற்குச் சென்ற அவன் அங்கே தவத்தில் ஆழ்ந்தான். அருகே கங்கையாறு ஓடிக் கொண்டிருந்தது.

அவனுக்கு நல்லறிவை உணர்த்த வேண்டுமென்று நினைத்தான் இந்திரன். ஒரு முதிய அந்தணன் வடிவம் கொண்டு அவனிருக்கும் இடத் திற்கு அருகே அமர்ந்தான்.

தன் கையால் மண்ணை அள்ளி அள்ளிக் கங்கை யாற்றில் போட்டுக் கொண்டு இருந்தான். இதைக் கண்ட அவன், "ஐயா! எதற்காக இப் படி மண்ணை அள்ளி அள் ளிப் போடுகின்றீர்?" என்று கேட்டான்.

அதற்கு அந்தணன், "மனி தர்களும் விலங்குகளும் ஆற் றைக் கடப்பதற்குப் பாலம் கட்டுவதற்காக மண்ணைப் போட்டுக் கொண்டிருக்கிறேன்" என்று பதில் தந்தான்.

"வெறும் மணலால் கங் கையில் பாலம் கட்ட முடியுமா? நீங்கள் போடும் மண்ணை எல்லாம் தண் ணீர் அடித்துக் கொண்டு சென்றிருக்குமே முதியவ ரான நீர் அறிவில்லாத இந்தச் செயலைச் செய் யலாமா? இனியாவது ஏதா வது பயனுள்ள செயலில் ஈடுபடுங்கள்" என்றான் அவன்.

அந்தணன் உண்மை யான இந்திரன் ஆனான். "நீயும் என்னைப் போலப் பயனற்ற செயல்தானே செய் தாய்".

எழுத்துக்களைத் தெரி ந்து கொள்ளாமலும் பாடம் படிக்காமலும் ஆசிரியரி டம் கேட்காமலும் வெறும் தவம் இருப்பதால் அறிவு கிடைக்காது.

இன்னும் காலம் கடந்து விடவில்லை. நல்ல ஆசிரி யரை நாடி முனைப்புடன் கல்வி கற்க முயற்சி செய். நீ சிறந்த அறிஞனாவாய்" என்று அவனை நோக்கிக் கூறி மறைந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தி மூலம்செய்யப்படும் முயற்சிகள் நம் இதயத்தில் மிக அற்புதமான நல்ல மாற்றங்களை ஏற்படுத்தும். – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கைதிகளால் நிறைந்துள்ள நம் நாட்டு சிறைச்சாலைகள்

நாட்டிலுள்ள ஒட்டுமொத்த சிறைச்சாலைகளும் கைதிகளால் நிறைந்துள்ளதாக சிறைச்சாலைகள் சார்ந்த செய்தித் தொடர்பாளர் லயன் ஜகத் சந்தன வீரசிங்க தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதிலும் இருக்கக்கூடிய சிறைச்சாலைகளில் பத்தாயிரத்து 500 பேரை மட்டுமே அடைத்து வைக்க முடியும்.

ஆனால் தற்போது குறித்த சிறைச்சாலைகளில் 40 ஆயிரம் கைதிகள் அடைக்கப்பட்டுள்ளனர் என அவரின் தகவல் அமைகிறது.

கூடவே கைதிகளில் 65 சதவீதமானவர்கள் சிங்கள பௌத்தர்கள் எனவும் அவர்களில் பெரும்பாலானோர் போதைப்பொருள் கடத்தல் மற்றும் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டவர்கள் எனவும் அவர் வெளியிட்ட தகவலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இங்கு 40 ஆயிரம் கைதிகளில் 65 சதவீதமானவர்கள் பௌத்த சிங்களவர்கள் என்ற பகுப்பாய்வு ஒரு விடயத்தை மிகத் தெளிவாகச் சுட்டி நிற்கிறது.

அதாவது, பௌத்த சிங்கள மக்களை பௌத்த பீடங்களும் பௌத்த துறவிகளும் சரியான முறையில் வழிப்படுத்தவில்லை என்பதே அந்த விடயமாகும்.

ஆம், இலங்கை பௌத்த சிங்கள நாடு என மார்தட்டுகின்ற பௌத்த துறவிகள்; புத்தபகவானின் போதனைகளை மக்களிடம் எடுத்துச் சென்றிருந்தால், போதைப்பொருள் கடத்தல் காரணமாக இத்துணை பௌத்தர்கள் சிறைகளில் அடைபட்டிருக்க வேண்டிய தேவை இருந்திருக்காது.

அதேநேரம் புத்தபிரானின் போதனைகளை பின்பற்றுகின்ற பௌத்த துறவிகளுக்கு ஏற்பட்ட தட்டுப்பாடு காரணமாகவும் கணிசமான பௌத்த சிங்களவர்கள் சிறைகளில் வாடுகின்ற அவலம் உருவாகியுள்ளது.

ஆம், இலங்கையில் தற்போதைய பௌத்த தேரர்களில் கணிசமானவர்கள் அரசியலில் ஈடுபட ஆரம்பித்துவிட்டனர்.

இங்கு தேரர்களின் அரசியல் என்பது கட்சி சார்ந்துள்ளது.

திருகோணமலையில் பௌத்த தேரர்களுக்கு, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகன் நாமல் ராஜபக்ஷ இராப்போசன விருந்து கொடுத்தார் எனில் – அந்த இராப்போசன விருந்தில் பௌத்த துறவிகள் பங்கேற்றனர் எனில், பௌத்த துறவிகளின் தகைமை எப்படியாயிற்றென்பது புரிதற்குரியது.

இங்குதான் பௌத்த துறவிகள் போதனைகளைக் கைவிட்டு – தர்மப் பாடசாலைகளைச் சீராக நடத்தாமல், அரசியல்வாதிகளுக்கு ஆதரவு வழங்குவதிலேயே காலத்தைக் கடத்துகின்றனர்.

இத்தகைய நிலையிலேயே சிங்கள மக்கள் மத்தியில் போதைப்பொருள் வியாபாரம் உச்சம் தொட்டுள்ளதெனலாம்.

ஆக, கைதிகளால் சிறைச்சாலைகளில் நெருக்கடி ஏற்படாமல் இருப்பதாக இருந்தால், அதற்கான ஒரே வழி அன்பு – அறம் – அகிம்சை என்பவற்றை போதிப்பதும் மக்கள் அவற்றைப் பின்பற்றச் செய்வதுமாகும்.

## மாகாண சபைத் தேர்தலுக்கு

# உள்ளித்தைலம் இட்ட கதையை ஜெனிவாவில் எடுத்தியம்பவுள்ள அரசு

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தல் இவ்வருடத்தில் நடத்தப்படும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும், அதனை அடுத்த வருடத்திற்கு ஒத்திவைக்க தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

மாகாண சபைத் தேர்தல் மற்றும் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் விவகாரம், புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் உட்பட தேசிய நல்லிணக்க பொறிமுறையின் பூரண விளக்கத்துடன் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தலைமையிலான சிறப்பு இராஜதந்திரிகள் குழு ஜெனிவா கூட்டத் தொடரில் கலந்து கொள்ளத் தயாராகி வருவதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 61 ஆவது கூட்டத்தொடர் இம்மாதம் 23 ஆம் திகதி ஜெனிவாவில் ஆரம்பமாகவுள்ளது. இதில் கலந்து கொள்வதற்காக வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தலைமையிலான இலங்கையின் உயர்மட்ட இராஜதந்திரிகள் குழு செல்லவுள்ளது.

இதன்போது இலங்கையின் பொறுப்புக்கூறல் மற்றும் தேசிய நல்லிணக்க பொறிமுறைகள் குறித்து முழுமையான அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது. அத்துடன் புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை ஜெனிவா செல்வதற்கு முன்னர் நிறைவேற்ற அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

மறுபுறம் தேசிய மற்றும் சர்வதேச சமூகத்தினால் வலியுறுத்தப்படும் மாகாண சபைத் தேர்தல் குறித்து அரசாங்கத்தின் செயற்பாடுகள் உற்சாகமாக இல்லை. பெரும்பாலும் இந்த தேர்தலை அடுத்த வருடத்திற்கு ஒத்திவைக்கவே அரசாங்கம் ஆர்வம் காட்டி வருகின்றது.

இதற்கான காரணத்தையும் விசேட குழு ஜெனிவாவில் முன்வைக்கும் என அறியப்படுகிறது. (ந-7)

## டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட ஜனாதிபதி நிதியம்

# மருத்துவ உதவி விண்ணப்பங்கள் 59 வீதத்தால் அதிகரிப்பு

ஜனாதிபதி நிதியத்தின் சேவைகள் பிரதேச செயலகங்களுக்குப் பரவலாக்கப்பட்டு டிஜிட்டல் மயமாக்கப்பட்டதன் ஊடாக ஓராண்டு காலத்திற்குள் மருத்துவ உதவிக்கான விண்ணப்பங்களின் எண்ணிக்கை 59 வீதத்தால் அதிகரித்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது குறித்து ஜனாதிபதி செயலகம் வெளியிட்ட அறிக்கையின்படி, 2025 ஆம் ஆண்டில் ஜனாதிபதி நிதியத்திற்கு 5,277 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன. கடந்த 2024 ஆம் ஆண்டில் 3,313 விண்ணப்பங்களும் 2023 ஆம் ஆண்டில் 3,456 விண்ணப்பங்களும் கிடைத்துள்ளன.

இதன்படி 2024 ஆம் ஆண்டை விட 2025 ஆம் ஆண்டில் 1,964 மேலதிக விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன. விண்ணப்பதாரர்களில் 70 வீதத்திற்கும் அதிகமானோருக்கு ஏற்கெனவே மருத்துவ உதவிகள் வழங்கி முடிக்கப்பட்டுள்ளன.

2025 ஆம் ஆண்டில், வடக்கு மாகாணத்தில் விண்ணப்பங்கள் சமர்ப்பித்தல் 253 வீதத்தால் அதிகரித்துள்ளது. அதேநேரத்தில் கிழக்கு மாகாணத்தில் 135 வீதத்தாலும், மத்திய மாகாணத்தில் 116 வீதத்தாலும், ஊவா மாகாணத்தில் 108 வீதத்தாலும் அதிகரித்துள்ளது. (ந-7)

## காலியில் தீ விபத்து

காலி, தெவட்ட சந்திப் பகுதியில் அமைந்துள்ள பழைய இரும்பு சேகரிக்கும் கடையொன்றில் தீப்பரவல் ஏற்பட்டுள்ளது.

தீயைக் கட்டுப்படுத்துவதற்காக மூன்று தீயணைப்பு வாகனங்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை தீ விபத்துக் காரணமாக காலி மாத்தறை பிரதான வீதியில் கடும் வாகன நெரிசல் ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

# வாகன விபத்து இருவர் காயம்

கரவெட்டி சம்மந்தர்கடை - இலகடிப் பகுதியில் நேற்று (08) ஞாயிற்றுக்கிழமை மதியம் இடம்பெற்ற வீதி விபத்தில் இருவர் காயமடைந்துள்ளனர்.

வீதியில் நேராகப் பயணித்த உந்துருளியும் வீதிக்குக் குறுக்காக வந்த மிதிவண்டியும் மோதி விபத்துக்குளாகியுள்ளன.

விபத்தில் காயமடைந்த இருவரும் உடனடியாக அங்கிருந்து மீட்கப்பட்டு சிகிச்சைக்காக மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ந-7,60)

# 582 கிலோ கஞ்சாவுடன் இருவர் அதிரடிக் கைது

உடவலவ தேசியபூங்காவின் கோமகல பகுதியில் கஞ்சாவைப் பொதி செய்து கொண்டிருந்த இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடமிருந்து சுமார் 582 கிலோகிராம் உலர் கஞ்சாவைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

ஹம்பேகமுவ பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்களுக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய இந்த சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் கட்டுவன மற்றும் மித்தெனிய பிரதேசங்களைச் சேர்ந்த 47 மற்றும் 51 வயதுடையவர்கள் என பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

விசாரணையின் பின் சந்தேகநபர்கள் நேற்று (08) வெல்லவாய நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். (ந-7)

# கைத்துப்பாக்கி ஒன்று கைவிட்ட நிலையில் மீட்பு

(நீர்கொழும்பு)

நீர்கொழும்பு துன்கல்பிடிய கடற்கரை வீதிக்கு அருகில் கைத்துப்பாக்கி ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய ராஜகிரியப் பொலிஸ் விஷேட அதிரடிப் படையினருடன் இணைந்து நேற்று முன்தினம் மாலை முன்னெடுத்த தேடுதலின் போது, துன்கல்பிடிய பிரதேசத்திலுள்ள கடற்கரை வீதியின் அருகே மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

7.65 மில்லிமீற்றர் ரக கைத்துப்பாக்கி ஒன்றே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் துன்கல்பிடிய பொலிஸ் நிலையத்தால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடாவடிக் கோட்டை

## அமெரிக்க உளவுத்துறை சிஐஏ வரலாறு 17

என்.சொக்கன்

நாட்டின் பாதுகாப்பு என்பது சீரியஸான விடயம். அதில் சமரசங்களுக்கு இடமில்லை. குற்றவாளிகளைக் கூப்பிட்டு, "வா ராஜா, உட்கார், காஃபி சாப்பிடுகிறாயா?" என்று தலை வருடிக்கொண்டிருக்க முடியாது. அதிரடியாக இறங்கினால் தான் உண்டு.

அமெரிக்காவின் விரோதிகளை உளவு பார்ப்பதற்காகவும், கட்டுப்படுத்துவதற்காகவும் அரசாங்கம் சிஜஏவுக்குக் கொடுத்திருந்த உரிமையை, நம்பிக்கையை, இப்போது அவர்களே மீறிவிட்டார்கள் என்று அந்த அதிகாரிகள் வருந்தினார்கள்.

இதில் இன்னொரு விடயம். சர்ச் கமிட்டியால் கண்டுபிடிக்கப்பட்ட 2 அத்துமீறல்கள். ஏழெட்டு வருடங்களுக்கு முன்பு நடந்தவை. அவை தவறு என்று புரிந்துகொண்டு, அவற்றை சிஜஏயே திருத்திக் கொண்டிருந்தது.

அதைக் கவனிக்காமல், அநாவசியமாகப் பழைய குப்பைகளைக் கிளறி சிஜஏவை அசிங்கப்படுத்துவது நியாயமில்லை என்பதுதான் அவர்களுடைய முக்கியமான ஆதங்கம். குறிப்பாக "ரெளடி" ப்பட்டம் அவர்களை மிகவும் அவமானப்படுத்தியிருந்தது.

சிஜஏவின் இந்த வருத்தங்களை அமெரிக்க அரசு கண்டுகொள்ளவில்லை. ஏற்கெனவே ஏகப்பட்ட அசிங்கங்கள் வெளிவந்துவிட்ட சூழலில், ஊர் வாயை மூடுவதற்காகவேனும் உளவுத்துறையைக் கொஞ்சம் கட்டுப்படுத்தி வைப்பதுதான் நல்லது என்று அவர்களுக்குத் தோன்றத் தொடங்கியிருந்தது.

இதனால், எழுபதுகளின் இறுதிப் பகுதியில் தொடங்கி, சிஜஏவின் அதிகாரங்கள் படிப்படியாகக் குறைக்கப்பட்டன. அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட வானளாவிய பட்ஜெட், மண்ணுக்கு இறங்கியது. ஆள்குறைப்பு செய்தார்கள். மிச்சமிருந்தவர்களின் ஒவ்வொரு நடவடிக்கையையும் லென்ஸ் வைத்துக்கொண்டு ஆராய்ந்தார்கள்.


இப்படி சிஜஏவின் பல் பிடுங்கப்பட்டதில், பலருக்கு சந்தோஷம். ஆனால் சிலர், இதெல்லாம் நல்லதுக்கில்லை. நாளைக்கே பேர்ள் துறைமுகத் தாக்குதல் போல் ஒரு விபரீதம் நடந்துவிட்டால் அதற்கு யார் பொறுப்பு?" என்று எச்சரித்தார்கள்.

கடைசியில், அதுதான் நடந்தது. சிஜஏவின் அதிகாரங்கள் குறைக்கப்பட்ட அடுத்த இருபது ஆண்டுகளுக்குள், அமெரிக்காவுக்குப் பல வலுவான விரோதிகள் உருவாகி விட்டார்கள்.

"வல்லரசாவது மண்ணாங்கட்டியாவது என்று தாக்கத் தயாராகி விட்டார்கள். இவர்களில் பலரை, அமெரிக்காவே. அதிலும் குறிப்பாக சிஜஏவே பாலூட்டிச் சீராட்டி வளர்த்ததுதான் விநோதம்!

**8. இரகசியம், பரம இரகசியம்**

"உளவு நிறுவனம்" என்று சொன்னால், உடனடியாக நம் மனத்தில் தோன்றுகிற பிம்பம் வேறு. மாறுவேஷம் அணிந்த உளவாளிகள், கையில், பையில் ஏகப்பட்ட எலக்ட்ரானிக் சாதனங்கள், எதற்கும் இருக்கட்டும் என்று இடுப்பில் செருகிய துப்பாக்கி, கூர்மையான பார்வை, இருட்டில், மழையில் யாரையோ பின்தொடர்ந்து போகிறார்கள், கரப்பான்கள் மட்டும் புகுந்து செல்லக்கூடிய ஒளிமறைவுப் பிரதேசங்களில் ஒட்டுக்கேட்கும் கருவிகளைப் பொருத்துகிறார்கள்.



இரகசிய ஆவணங்களை போட்டோ பிடிக்கிறார்கள். "எல்லாத் தகவலும் கிடைச்சுடுச்சு. ஓவர் என்று வயர்லெஸ் ரேடியோவில் சேதி சொல்கிறார்கள். இவை அனைத்தும், சிஜஏவிலும் உண்டு. ஆனால், அவர்களுடைய நிஜமான நடவடிக்கைகள் அதன்பிறகுதான் தொடங்குகிறது.

1947ஆம் ஆண்டு சிஜஏ தொடங்கப் பட்டபோது. அது இத்தனை பெரிய இராட்சஸ நெட்வொர்க்காக இல்லை. வழக்கமான அரசு அலுவலகங்களைப் போல, வோஷிங்டனில் ஒரு சிறிய வாடகைக் கட்டடத்தில்தான் இயங்க ஆரம்பித்தார்கள்.

உலகப் போர்க் களேபரங்களெல்லாம் ஒருவழியாக முடிந்தபிறகுதான், அவர்கள் சற்றே பெரிய அலுவலகத்துக்கு இடம் மாற முடிந்தது. அப்போதும், அமெரிக்க அதிபரின் வெள்ளை மாளிகைக்கு அருகில்தான் அவர்களுடைய அலுவலகம் இருக்க வேண்டும் என்று ஒரு கட்டாயம்.

காரணம், சிஜஏயின் அதிமுக்கியமான கஸ்டமர். அமெரிக்க ஜனாதிபதிதான். அவருக்குத் தகவல்களைத் திரட்டிக்கொடுப்பதுதான் அவர்களுடைய பிரதான வேலை. தகவல்கள் என்றால், இஸ்லாமாபாத்தில் இன்று மழை பெய்தது.

டில்லியில் கடுமையான தூசுப் புயல். ஜோர்தானில் ஜோராக ஓர் ஊர்வலம் நடந்துகொண்டிருக்கிறது என்று தொடங்கி, பல்வேறு நாடகளில் நிகழ்கிற சமூக மாற்றங்கள், இராணுவ நடவடிக்கைகள், அறிவியல் முன்னேற்றங்கள், இன்ன பிற விபரங்களையெல்லாம் தொகுத்துத் தருகிறார்கள்.

சிஜஏ தொடங்கப்பட்ட புதிதில், இந்த அறிக்கைக்குப் பெயர் "National Intelligence Daily". அமெரிக்க அரசாங்கத்தின் முக்கியப் பொறுப்பில் இருந்த சுமார் 250 மூத்த அதிகாரிகளுக்கு இந்தத் தினசரி தகவல் அறிக்கை வழங்கப்பட்டது.

செய்தித்தாள்மாதிரிதான், ஆனால், பரம இரகசியமான செய்தித்தாள். அதில் இடம்பெறும் தகவல்கள், அநேகமாக சிஜஏவுக்கு வெளியில் வேறு யாருக்கும் தெரிந்திருக்காது.

கென்னடி அமெரிக்க ஜனாதிபதியான போது, இந்த வழக்கத்தில் ஒரு சின்ன மாற்றம் வந்தது. காரணம், "National Intelligence Daily"யை ஏதோ சுண்டல் விநியோகம்போல் எல்லோருக்கும் வழங்குவது அவருக்குப் பிடிக்கவில்லை.

எல்லோருக்கும் எல்லா இரகசியங்களும் தெரிந்துவிட்டால், அதன் பிறகு ஜனாதிபதி பதவிக்கு என்ன மரியாதை? அவருக்கு மட்டுமே தெரிந்த இரகசியங்கள் என்று சிலது இருந்தால்தானே கொஞ்சம் மதிப்பாக இருக்கும்?

"எனக்குமட்டும் தனியாக ஒரு தினசரி அறிக்கை தயார் செய்யுங்கள்" என்று சிஜஏவுக்கு ஆணையிட்டார் கென்னடி. அதாவது, ஜனாதிபதியின் தேவைக்கேற்ப அவர் தெரிந்துகொள்ள விரும்பும் . தகவல்களை மட்டும் உள்ளடக்கிய சுருக்கமான ஓர் அறிக்கை.

இதற்கு PDB என்று பெயர் வைத்தார்கள்- President's Daily Brief. சுமார் எட்டு முதல் பத்து பக்கங்களைக் கொண்ட PDB தான், அமெரிக்காவின் மிக இரகசியமான ஆவணம். இதைத் தயாரித்து அமெரிக்க ஜனாதிபதியிடம் வழங்குவதற்காகவே, சிஜஏவில் ஒரு தனிக் குழு இயங்கிக்கொண்டிருக்கிறது.

தினமும் காலை எழுந்தவுடன் பல் தேய்த்துக் காஃபி குடித்துவிட்டு, PDBயைப் புரட்டுவதுதான் அமெரிக்க ஜனாதிபதியின் முதல் வேலை. ஒருவேளை அவர் ஊரில் இல்லாவிட்டாலும் கூட, ஃபேக்ஸ் (Fax) மூலம் அவருக்கு PDB அனுப்பப்பட்டாக வேண்டும். ஆரம்பத்தில், அமெரிக்க ஜனாதி பதிக்கு மட்டும் என்றிருந்த PDB, அதன்பிறகு வேறு சில முக்கிய அதிகாரிகளுக்கும் வழங்கப்பட்டது.

ஆனால், யாரெல்லாம் இதைப் படிக்கலாம் என்று தீர்மானிப்பது ஜனாதிபதிதான். "புக்" என்று செல்லமாக அழைக்கப்படும் இந்த அறிக்கையின் அடிப்படையில்தான், ஜனாதிபதி பல அரசியல், இராணுவ முடிவுகளை எடுப்பார். ஆகவே கடைசி விநாடித் தகவல்களையும் இதில் இடம்பெறச் செய்ய வேண்டியது சிஜஏவின் பொறுப்பு.

இதனால், ஒவ்வொரு நாள் இரவும், PDB அறிக்கை தயார் செய்யப்பட்டபிறகு, மறுநாள் அதிகாலையில் எழுந்து. இரவு முழுவதும் வந்த தகவல்களைத் தொகுக்கிறார்கள். புதிய செய்திகள், புகைப்படங்கள், அலசல்களைச் சேர்த்து, அதன்பிறகுதான் அச்சுக்கு அனுப்புகிறார்கள்.

(தொடரும்.....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மின்கட்டணக்...

பிக்கவுள்ளார்.

இலங்கை மின்சார சபையை மறுசீரமைக்கும் திட்டம் 5 கட்டங்களின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், அதில் 04 கட்டங்கள் தற்போது வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டுள்ளன.

இதற்கமைய அடிப்படை கைமாற்றல் திட்டம், வருடாந்த மின் கொள்முதல் திட்டம், நீண்டகால மின்னுற்பத்தித் திட்டம் மற்றும் நீண்டகால மின் பரிமாற்ற அபிவிருத்தித் திட்டம் ஆகிய கட்டங்கள் இவ்வாறு நிறைவு செய்யப்பட்டுள்ளதாக மின்சார சபை மறுசீரமைப்புச் செயலணியின் தலைவர் புபுது நிரோஷன் அண்மையில் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் இதன் இறுதிக் கட்டமான தேசிய மின்சக்தி கொள்கை மற்றும் தேசிய மின் கட்டணக் கொள்கையைத் தயாரிக்கும் பணிகள் இடம்பெற்று வந்த நிலையில், அவை இன்று அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகத் தெரிய வருகிறது. (ந-7)

## வெளிக்குடியேற்...

குறித்த திட்டத்துக்குள் தமிழர்களையும் உள்வாங்குவதுதான் எமது இலக்காக உள்ளது என்று கூட்டுறவு அபிவிருத்தி பிரதியமைச்சர் உபாலி சமரசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிவுல் ஓயாத்திட்டமானது 2007 ஆம் ஆண்டு திட்டமிடப்பட்டு 2011 ஆம் ஆண்டு முன்னெடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. கடந்த காலத்தில் ஆட்சியில் இருந்த மகிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்க, கோட்டாபய ராஜபக்ஷ உள்ளிட்ட அத்தனை தலைவர்களும் இத்திட்டத்தினை முன்னெடுப்பதற்குரிய செயற்பாடுகளை மேற்கொண்டனர்.

துரதிர்ஷ்டவசமாக குறித்த திட்டத்தினை முன்னெடுப்பதற்குரிய நிதி ஒதுக்கீடுகள் முறையாகக் காணப்படவில்லை. அதனடிப்படையில்தான் அத்திட்டத்தினை முறையாக நகர்த்தியிருக்க முடியவில்லை.

மேலும் குறித்த திட்டமானது கொழும்பிலிருந்து திட்டமிட்டு அமுல்படுத்துவதற்கு முயல்வதால், தமிழ் மக்கள் மத்தியில் பல்வேறு அச்சமான நிலைமைகள் காணப்படுகின்றன.

1983இலிருந்து நீர்ப்பாசனத் திட்டங்களைப் பயன்படுத்தி குடியேற்றங்கள் செய்யப்பட்டுள்ளதால், தமிழ் மக்கள் மத்தியில் அவ்விதமான அச்சம் ஏற்படுவது இயல்பானது. ஆனால் முல்லைத்தீவு மாவட்டத்திலும் வவுனியா மாவட்டத்திலும் நீர்ப்பாசனத்தினை மையப்படுத்தி மேற்கொள்ளப்பட்ட குடியேற்றங்களில் வாழ்ந்த மக்கள் அங்கு வாழ முடியாத நிலைமையால் வெளியேறிவிட்டார்கள் என்பதுதான் யதார்த்தமாகும்.

அவர்களின் வாழ்வாதாரத்துக்கான நீர் வசதிகள் இல்லாமையால் அவர்கள் அங்கிருந்து வெளியேறிவிட்டார்கள். இந்நிலையில் தற்போது கரைத்துறைப்பற்று, வவுனியா வடக்கு உள்ளிட்ட பகுதிகளில் வாழும் தமிழ் மக்களும் விவசாயத்தினை மேற்கொள்கின்றார்கள்.

அதேபோன்று ஜனகபுர உள்ளிட்ட பகுதிகளில் வாழும் சிங்கள மக்களும் விவசாயத்தினை மேற்கொள்கின்றார்கள்.

ஆகவே அவர்களின் வாழ்வாதாரத்தினையும் கவனத்தில் கொண்டு தமிழ் மக்களையும் உள்ளீர்த்து நாம் கிவுல் ஓயாத்திட்டத்தினை முன்னெடுப்பதற்கு எதிர்பார்க்கின்றோம். இந்த திட்டத்தினை முன்னெடுப்பதால் எவ்விதமான குடியேற்றங்களும் இடம் பெறாது என்பதை உறுதியாகத் தெரிவித்துக் கொள்கின்றேன் என்றார். (ந-7)

## கிவுல் ஓயாத்...

அரச அதிகாரிகள் மற்றும் விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்டோருக்கு இவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த கலந்துரையாடலின்போது கொழும்பிலிருந்து வருகைதரவுள்ள மாகாவலி அதிகாரசபையின் அதிகாரிகள் குழுவொன்று கிவுல் ஓயாத் திட்டம் சம்பந்தமாக விளக்கக் காட்சிகள் அடங்கிய தெளிவுபடுத்தல்களை முன்னெடுக்கவுள்ளது.

அத்துடன், இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்கும் தரப்பினர்களுக்கு காணப்படும் சந்தேகங்களுக்கான பதிலளிப்புக்களும் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, தற்போது புதுப்பிக்கப்பட்டுள்ள கிவுல் ஓயாத் திட்டம் சம்பந்தமாக வவுனியா நெடுங்கேணி பிரதேச செயலக அதிகாரிகளும் கரைத்துரைப்பற்று பிரதேச செயலக அதிகாரிகளும் மிகத்தீவிரமாக கள ஆய்வுப் பணிகளை முன்னெடுத்து வருகின்றனர்.

குறிப்பாக, கடந்த 2ஆம் திகதி முன்னெடுக்கப்பட்ட மக்கள் போராட்டத்தினை அடுத்து, கிவுல் ஓயாத் திட்டத்தினை முன்னெடுப்பதால் காணப்படுகின்ற பிரச்சினைகளை கண்டறியும் முகமாகவே குறித்த கள ஆய்வுப் பணிகளை அதிகாரிகள் முன்னெடுத்துள்ளதாகத் தெரியவருகிறது.

ஆரம்பத்தில் குறித்த திட்டத்துக்கான அங்கீகாரத்தினை மகாவலி அபிவிருத்தி அதிகார சபை வழங்கியிருந்த நிலையில், அத்திட்டம் சம்பந்தமாக அதிகாரிகள் கள ஆய்வுகளை மேற்கொண்டிருக்கவில்லை. எனினும் தற்போது மக்களால் எதிர்ப்புகள் ஏற்பட்டுள்ளதால், அவற்றுக்குப் பதிலளிக்கும் வகையில் கள ஆய்வுப் பணிகளை அவசரமாக முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் கே.டி. லால் காந்தவின் பங்கேற்புடன் எதிர்வரும் 19ஆம் திகதி வவுனியா மாவட்டச் செயலகத்தில் கிவுல் ஓயாத் திட்டம் சம்பந்தமாக இறுதியான கூட்டத்தினை முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகக் கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க உறுதிப்படுத்தியுள்ளார். (ந-7)

## செம்...

முடியாது எனக் கண்டறியப்பட்டது.

இந்நிலையில் வெள்ள நீரை வெளியேற்றுவதற்கு இன்றைய திகதியை (09) யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்ற நீதிபதி எஸ்.லெனின்குமார் பரிந்துரைத்திருந்தார்.

இதன் பிரகாரம் இன்று காலை 9 மணிக்கு நீதிமன்றத்தின் கண்காணிப்பில் நல்லூர் பிரதேச சபையால் வெள்ள நீரை வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அதன்பின் நிலைமைகள் ஆராயப்பட்டு அகழ்வுக்குரிய திகதி நீதிமன்றால் நிர்ணயிக்கப்படும்.

செம்மணி மனிதப் புதைகுழியில் இதுவரை இடம்பெற்ற அகழ்வில் 240 மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378, 076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2026.02.08
சீட்டிழுப்பு இலக்கம் 6099
G 9 8 2 0 5
அத சம்பத
G 8 2 0 5
சீட்டிழுப்பு இலக்கம் 0674

சுப தவசக
திகதி 2026.02.08
சீட்டிழுப்பு இலக்கம் 213
சிம்மம் 04 10 46 1430

தன நிதானய
திகதி -2026.02.08
சீட்டிழுப்பு இலக்கம் - 2129
F 18 53 68 71 F

மெகா பவர்
திகதி 08/02/2026
சீட்டிழுப்பு இலக்கம் 2447
N 02 01 12 55 72

ஜய
திகதி 2026.02.08
சீட்டிழுப்பு இலக்கம் 0367
I 4 8 2 6

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4341
சீட்டிழுப்பு திகதி 08.02.2026
X 09 13 31 46
X

ஹந்தஹன
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2026.02.08
சீட்டிழுப்பு இலக்கம் 1408
மேடம் 01 11 41 55 மேடம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
08.02.2026 வெற்றி வாரம் 0807
T 2 2 0 5 4 8
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20,788,212.80

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 3073
சீட்டிழுப்பு திகதி 2026.02.08 தினம் ஞாயிற்றுக்கிழமை
25 26 27 54 W
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 96,596,496.60

சனிதா
திகதி 08.02.2026 வெற்றி வாரம் 5234
02 25 72 76 S
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 50,634,556.80

சசிரி
வெற்றி வாரம் 903
சீட்டிழுப்பு திகதி 08.02.2026
ஞாயிற்றுக்கிழமை
08 37 50
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,339,840.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4785
சீட்டிழுப்பு திகதி 08.02.2026 தினம் ஞாயிற்றுக்கிழமை
02 08 18 44 சிம்மம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.8,772,414.40

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
S 34 17 31 41 65
சீட்டிழுப்பு வாரம் 2249
08.02.2026 ஞாயிற்றுக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.627,086,807.20

ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம் : 2899
சீட்டிழுப்பு திகதி :2026.02.08
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.87,325,425.60
06 08 27 57 W

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கல்வித்துறையில் பாரிய நெருக்கடி குற்றம் சுமத்துகிறார் சஜித்



கல்வித் துறையில் தற்போது நாளுக்கு நாள் நெருக்கடியான சூழ்நிலை உருவெடுத்து வருகின்றது என எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சுமத்தியுள்ளார்.

கல்வித் துறையில் மனிதவள முகாமைத்துவம் தொடர்பாக கடந்த காலங்களில் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமல், கல்வித்துறையில் மனிதவளத்தை ஏமாற்றமடையச் செய்யும் கொள்கை முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன.

ஆசிரியர் - அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் விவகாரத்தில் அரசாங்கம் நடந்து கொண்ட விதம் போலவே இந்த விவகாரத்திலும் அரசாங்கம் நடந்து வருகின்றது.

அதிபர் சேவையின் 3 ஆம் தரத்துக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை 2019 இல் நடைபெற்றது. முதல் சுற்றில் ஆயிரத்து 858 பேரும், இரண்டாவது சுற்றில் 4 ஆயிரத்து 800 பேரும் இணைத்துக் கொள்ளப்பட்டனர்.

இருப்பினும் மேலும் ஆயிரத்து 216 பேர் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து அதிபர் சேவையில் சேரத் தயாராகவுள்ளனர்.

ஆனால் தற்போதைய அரசாங்கம் இவர்களை நியமிக்காமல் புதிய போட்டிப் பரீட்சையை நடத்தி ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

3 ஆம் தர அதிபர் சேவைப் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து இன்னும் சேவையில் இணைத்துக் கொள்ளப்படாத தரப்பினர் எதிர்க் கட்சித் தலைவரை அவரது அலுவலகத்தில் சந்தித்தபோதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இவ்வாறு குறிப்பிட்டார்.

அரசாங்கத்திடம் திறமையான மற்றும் முறையான திட்டமொன்று இல்லாததன் காரணமாக, கல்வித்துறையில் பாரிய சரிவு ஏற்பட்டு வருகின்றது.

கல்வி அமைச்சர் முதல் அதிகாரிகள் வரை கல்வியை ஆபாசமயப்படுத்தியதால் கல்விச் சீர்திருத்தங்கள் நாசமடைந்து போயுள்ளன.

பிரதமர் ஒன்றைச் சொல்கிறார், ஜனாதிபதி வேறொன்றைச் சொல்கிறார். இவ்வாறு இருவரும் முரணான கருத்துக்களைச் சொல்லி வருகின்றனர்.

ஜனாதிபதி மற்றும் பிரதமரின் ஒன்றுக்கொன்று முரண்பாடான கருத்துக்களால், கல்வித்துறையில் பிள்ளைகளும் மனித வளங்களுமே பெரும் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றன.

கல்வித் துறைக்கு ஏற்கனவே ஏற்பட்டுள்ள பாதிப்பு கடுமையானது என்பதால், மேலும் இங்கு பாதிப்புகளை ஏற்படுத்தாது, அதிபர் சேவைக்கான போட்டிப் பரீட்சையில் ஏலவே சித்தி பெற்றவர்களை இணைத்துக் கொள்ளுமாறு அரசாங்கத்திடம் கேட்டுக் கொள்கிறேன் என்றும் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேலும் தெரிவித்தார். (ந-7)

## தமிழர்...

தேசியக் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு இடையிலான விசேட சந்திப்பொன்று கொழும்பில் நடைபெறவுள்ளது.

இலங்கை - சுவிட்ஸர்லாந்து பாராளுமன்ற நட்புறவு சங்கத்துடன் கூட்டிணைந்து சுவிட்ஸர்லாந்து அரசாங்கத்தின் ஏற்பாட்டில் அந்நாட்டின் கூட்டாட்சி அரசியல் முறைமை மற்றும் தேசிய ஒருமைப்பாடு வலுவாக்கம் என்பன பற்றி இலங்கையின் ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்களுக்குத் தெளிவூட்டும் வகையிலான செயலமர்வொன்று கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் 14 - 21 ஆம் திகதி வரை சுவிட்ஸர்லாந்தில் நடைபெற்றிருந்தது.

அச்செயலமர்வின்போது சுவிட்ஸர்லாந்தின் அரசியல் முறைமை மற்றும் இருதரப்பு உறவுகள், சுவிட்ஸர்லாந்தின் கூட்டாட்சி (பெடரல்) முறைமையை ஆழமாகப் புரிந்து கொள்ளல் ஆகிய தலைப்புக்களில் இலங்கை அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு விரிவான தெளிவூட்டல்கள் வழங்கப்பட்டதுடன், அதனுடன் தொடர்புடைய முக்கிய கட்டமைப்புக்களுக்கான கள விஜயங்கள் மற்றும் உயர்மட்ட சந்திப்புக்கள் என்பனவும் இடம்பெற்றன.

அவ்விஜயத்தைத் தொடர்ந்து அதில் பங்கேற்ற கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உள்ளிட்ட பிரதிநிதிகளிடம் கேட்டறிந்த இலங்கைக்கான சுவிட்ஸர்லாந்து தூதுவர் சிறி வோல்ற், இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரனையும் சந்தித்து மேற்படி விஜயம் குறித்து விளக்கமளித்திருந்தார்.

இவ்வாறு நிகழ்ந்த சந்திப்புக்களின் போது தமிழர்களுக்கான அரசியல் தீர்வு விடயத்தைப் பொறுத்தமட்டில் சகல தமிழ்த்தேசியக் கட்சிகளும் ஒருமித்த நிலைப்பாட்டுக்கு வரவேண்டியது அவசியம் என்ற விடயம் தமிழ்ப் பிரதிநிதிகளால் தூதுவர் சிறி வோல்ற்றிடம் எடுத்துரைக்கப்பட்டது.

இவ்வாறானதொரு பின்னணியில் சுவிட்ஸர்லாந்து தூதரகத்தின் ஒருங்கிணைப்பில் ஒரு கூட்டு சந்திப்பை நடாத்துவதற்கு தமிழ்த்தேசியக் கட்சிகள் உடன்பட்டதையடுத்து, அதனை எதிர்வரும் 19 ஆம் திகதி கொழும்பில் நடாத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இச்சந்திப்பில் இலங்கைத் தமிழரசுக்கட்சி சார்பில் அதன் பதில் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன், பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ்.சிறீதரன் மற்றும் இரா.சாணக்கியன், ப.சத்தியலிங்கம் ஆகியோரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் அதன் தலைவரும்பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் கட்சி தீர்மானிக்கும் பிறிதொருவரும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் சார்பில் அதன் ஊடகப்பேச்சாளர் சுரேஷ் பிரேமசந்திரன் மற்றும் கூட்டணி தீர்மானிக்கும் பிறிதொருவரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

அதுமாத்திரமன்றி சிவில் சமூகத்தின் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி குமாரவடிவேல் குருபரனுக்கு அழைப்பு விடுப்பதற்கு சுவிஸ் தூதரகம் தீர்மானித்திருப்பதாக அறியமுடிகின்றது.

சுவிட்ஸர்லாந்து உயர்ஸ்தானிகர் சிறி வோல்ற்றின் மத்தியஸ்தத்தில் நடைபெறவிருக்கும் இச்சந்திப்பின் போது தமிழர்களுக்கான அரசியல் தீர்வு விடயத்தில் சகல தமிழ்த்தரப்புக்களும் ஒருமித்த நிலைப்பாட்டுக்கு வருவது பற்றிக் கலந்துரையாடப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. (ந-7)


### காணி விற்பனைக்கு

சுன்னாகத்தில் இருந்து புன்னாலைக் கட்டுவன் செல்லும் பிரதான வீதியோரமாக 28 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. வீதியோர முகப்பு 300 அடி நீளம் கொண்டது.

076 742 4301, 075 710 9639

(தரகர் தொலைபேசி இலக்கம்)

Easy Real Estate (6777)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

### ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-4968)

076 825 7716 (ஆகாஸ்)

### வேலையாள் தேவை

யாழ்.நகரில் அமைந்துள்ள பிரபல புத்தக சாலைக்கு வேலையாட்கள் தேவை.

- ஆண்,பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளவும்
- வயதுகள் பிரச்சினை இல்லை
- அனுபவமுள்ளவருக்கு முன்னுரிமை

ஏனைய விபரங்களுக்கு நேரில் தொடர்பு கொள்ளவும். (C-4966)

தொடர்பு: 077 964 7256

### சேவைநலன் பாராட்டு



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உடற்கல்விப் பணிப்பாளராக சேவையாற்றி ஓய்வுபெறும்

திரு. கதிர்காமநாதன் கணேசநாதன்

(உடற்கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

Best Wishes!

அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஆற்றிய சேவையைப் பாராட்டுவதோடு அவர் ஓய்வுக்காலத்தில் சகல நன்மைகளையும் பெற்று சௌபாக்கியமாக வாழ வாழ்த்துகின்றோம்.

நியமனம் 12.12.1994 | ஒய்வு 05.02.2026

உடற்கல்விச் சமூகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் (C-4967)

### மணப்பெண் பெண் தேவை

01.சாவகச்சேரி, இந்து, 1995, புனர்பூசம், Computer Science & Engineering, Software Engineer, Canada Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (54523)

02.கிளிநொச்சி, இந்து, 1996, சதயம், Bsc in Accounting & Msc, Company Manager, UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (42893)

03.சரசாலை, இந்து, 1997, அவிட்டம், Software Engineering, Software Engineer, Singapore Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (33515)

04.யாழ்., இந்து, 1998, திருவோணம், BBA, Msc, CIMA, Banker, UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.(57372)

05.இணுவில், இந்து, 1994, திருவோணம், Bachelor of civil Engineering, Civil Engineer, Australia Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (54449)

06.அளவெட்டி, இந்து, 1985, திருவோணம், Business Administration, Engineer, Canada Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (29992)

07.கொக்குவில், இந்து, 1986, ரோகிணி, Bachelor of IT, Accountant, Norway Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (31506)

08.புங்குடுதீவு, இந்து, 1989, சித்திரை, BA Economics, Accountant, Switzerland Citizen மாப்பிள்ளைக்குப்பெண் தேவை. (27688)

09.சாவகச்சேரி, இந்து, 1990, திருவோணம், BBA & B.English, Quality Controler, Germany Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (31102)

10.சங்கானை, இந்து, 1991, சதயம், BBA & Masters, Manager, UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (53902)

நீங்களாகவே எமது www.thaalee.com என்கின்ற website இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம். Unmarried, Divorce என்பன உண்டு. (6722)

S.Sharma J.P
www.thaalee.com
077 539 3728
074 387 3686


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.02.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org